உ
சிவமயம்

விசேஷ
விளம்பரத்திற்கு!

இந்துசாதனம்

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்

விசேஷ
விளம்பரத்திற்கு!

Registered as a Newspaper in Ceylon.
P. M. G. No. H. A. 59/300 of 1939.

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும், போன்றதே ஈசனெந்தை யிணையடி நீழலே.

விரோதி வருஷம் (1889) ஆவணிமாதம்
28-ம் திகதி ஆரம்பமானது.

[புத்தகம் ருக] யாழ்ப்பாணம்:— விஷு ௵ சித்திரை ௴ ௨௬ உ (1941 மே 8 வியாழக்கிழமை) [இலக்கம் அ]

கற்புநிலையும் நவநாகரீகமும்

(ஆசிரியர் S. சுப்பிரமணியம், மானிப்பாய் விவேகானந்த வித்தியாசாலை)

"பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்
பென்னும்
திண்மை யுண்டாகப் பெறின்."

என்னுங் குறளில் ஒருவன் பெறத்தக்குரிய பொருள்களில் மனையாளினும் உயர்வாகிய பொருள் வேறு இருக்கின்றன! அவளிடத்தே கற்பென்னும் கலங்கா நிலைமையிருக்கப்பெறுமேல், என்ற திருவள்ளுவநாயனார் திருவுளம் பற்றினமையால் உலகத்திலே பெண்களாய்ப் பிறந்தவர்கள் தமக்குரிய நாண், மடம், அச்சம், பயிர்ப்பு என்னும் நால்வகைக் குணங்களும் ஏதுவாக, மனதைப் பலவிடத்தும் செல்லவிடாது நிறுத்திக் கற்புநிலை கெடாதிருக்கவேண்டும். அந் நான்கு குணங்களில் நாணென்பது நாணம், மடம் என்பது எல்லாம் அறிந்தும் அறியாததுபோலிருத்தல், அச்சம் என்பது என்றும் காணாததைக் கண்டவிடத்து அஞ்சுதல், பயிர்ப்பு என்பது கணவரல்லாதார் கைமேற்படின் உடம்பு அருவருத்தலாம். இக்குணங்களே உத்தம பெண்களுக்கு இயல்பாக அமையவேண்டுமென ஆங்கில நூலாசிரியர்களாகிய செக்ஸ்பியர் (Shakespeare) மில்றன் (Milton) ரெனிசன் (Tennyson) அடிசன் (Addison) முதலிய நூலாசிரியர்கள் தம் நூல்களில் விரிவாகக் கூறியுள்ளார்கள். உதாரணமாக "நீர் விரும்பியவிதமே" (As you Like it) எனும் நூலில் செகஸ்பியர் (Rosalind) என்னும் பெண்ணின் குணநலத்தையும் (Chastity) கற்பு நிலையையும் அவள் (Orlando) 'ஓர்லாண்டோ' மீது கொண்டுள்ள காதலின் தூய்மையையும் எவ்வளவு மேன்மையாக மக்கள் கற்று ஒழுகும்படி விபரித்திருக்கின்றார். மில்றன் தாம் எழுதிய 'சாம்சனின் கலக்கம்' (Samsons Agonistes) என்னும் நூலில் பின்வருமாறு கூறுகின்றார்.

"Favoured of Heavenwhofinds
One virtuous, rarely found
That in domestic good combines
Happythat house his way to
peace is smooth.

கற்புடைய மனைவி வாய்க்கப் பெறுபவன் உண்மையாகவே தேவனின் அருளைப் பெற்றவனாகின்றான். அவனுக்கே இல்வாழ்க்கையில் இன்பமும் அமைதியும் உண்டு. இவ்வாறே எல்லா நூல்களும் எல்லாச் சமயங்களும் எக்காலத்திலும் பெண்களுக்குக் கற்பே மேலான ஆபரணமென்றும் அதையே அவர்கள் தங்கள் உயிரினும் மேலாகப் பேணவேண்டுமென்றும் போதிக்கின்றன. இங்ஙனமிருக்க நந்நாட்டுப் பெண்கள் கல்லூரிகளில் படிக்கத் தொடங்கினதும் சுயேச்சையோடு உலாவவும் ஒழுக்கத்தைக் கைவிடவும் தொடங்குகின்றார்கள். கொழும்புச் சர்வகலாசாலையிற் படிக்கும் சேர்ந்த பெண்கள் சிலர் ஒருமுறை புகைவண்டியிற் பிரயாணம் செய்யும்பொழுது எவ்வளவு ஒழுக்கக் குறைவாக ஓர் பாட்டியுடன் நடந்தார்களென்பதை பத்திரிகை மூலம் அறிந்தோம். எத்தனையோ கல்லூரிப்பெண்கள் பெற்றோரின் விருப்பத்திற்கு மாறாக ஒழுக்கத்தைப் பாதிக்குமுறையில் விவாகம் செய்ய விரும்புகின்றனர். ஒருமுறை ஓர் கல்லூரியில் சினியர் வகுப்பில் படிக்கும் மாணவி தன் தற்காலிக இச்சைக்கு (passing temptation) இடங்கொடுத்து ஓர் சேவகனை (Peon) விவாகம் செய்ய விரும்பி நீதிபதியின் உத்தரவைக் கேட்டபொழுது, நீதிபதி தான் அப்பெண்ணுக்கு உத்தரவு கொடுப்பதால் இந்த நாகரீகக் கட்டுப்பாடுகளெல்லாம் சீர்குலைந்துவிடுமெனக் கூறி மறுத்தார். இவையெல்லாம் பிரபலிக்கமாக வந்த விஷயங்கள். ஆனால் இவ்விதமான சீர்கேடுகள் எவ்வளவு நம் சனங்களிடையே குடிகொண்டு நாளடைவில் நாகரிகமாக மாறுகின்றன. இது 'பழையன கழிதலும் புதியன புகுதலும்' எனும் கோட்பாட்டைத் தழுவியதுபோலும். கல்வி கற்ற பெண்கள் ஒழுக்கத்தில் முன்மாதிரியாக நடந்து மற்றவர்களையும் வழிகாட்டிச் செல்லவேண்டும். அதற்கு நேர்மாறான பாதையில் நம் பெண்சகோதரிகள் நடந்து கொள்வதையும் இதனை ஆண்களும் ஆதரித்துவருவதையும் பார்க்குமிடத்து மனித சமூகம் மிருக சமூகமாக மாறிவிடுமோ எனப் பயப்படவேண்டியிருக்கிறது. தகாத முறையில் நடந்துகொள்ளும் ஆடவர்களையோ பெண்களையோ முதியோர்கள் கண்டிக்க நேர்ந்தால், "ஓ காட்டுமிராண்டிகளே, உங்களுக்குஎன்ன தெரியும், இதுதான் மேனாட்டு நாகரீகமெனத் துணிவாகக் கூறுகின்றனர்." கல்லூரிகள் இவர்களுக்கு இத்தகைய நாகரீகத்தைப் போதிக்கின்றனவா அல்லது மேனாட்டு நாகரீகத்தின் இரகசியத்தையும் தூய்மையையும் இவர்கள் அறிந்துவிட்டார்களா? மேனாடுகளிலும் இராசகுடும்பங்கள் என (Aristocratic families) அழைக்கப்படும் உயர்ந்த குடும்பங்களில் தூய்மையும் சகோதரத்துவமுமே முக்கியமாக நிலவக் காணலாம். இவர்களின் தூய்மையான நாகரிகப்படி ஓர் விவாகமாகாத ஆடவனும் பெண்ணும் எவ்வளவு காலம் கூடிக்குலாவி பழகினபோதும் தங்கள் ஒழுக்கத்திற்குப் பங்கமில்லாமல் நடந்து கொள்கின்றனர். விவாகமில்லாமல் கன்னிகைகளாயிருக்கும் பருவத்தில் தாய் தந்தையர் ஆதீனத்திலும் விவாகமானபின் கணவரின் ஆதீனத்திலும், பின் புத்திரரின் ஆதீனத்திலும், புத்திரர் இல்லாவிடில் சகோதரரின் ஆதீனத்திலும் இருக்கவேண்டுமேயல்லாமல் ஒருபோதும் பெண்கள் சுவாதீனப் பட்டிருக்கலாகாது. பெண்கள் பகிரங்க வேலைகளில் ஈடுபட்டுத் தொண்டாற்றுவது விரும்பத்தக்கதல்ல. அவர்கள் வீட்டிலிருந்தே மிகவும் மேலானதொண்டு செய்து சமூகத்தை ஈடேற்றவேண்டியவர்கள். தங்கள் கணவர்க்கு நல்ல மந்திரியாகவும் பிள்ளைகளுக்குக் குருவாகவுமிருந்து வீட்டாட்சியை நடத்த வேண்டியவர்கள். இதைவிட்டு ஆடவர்களோடு போட்டிபோட்டு வெளிவேலைகளில் ஈடுபடுவதால் நாகரீகம் சீர்குலைந்து விடுகிறது. இவர்களுக்குப் பிறக்கும் பிள்ளைகள் துர்ப்பழக்கமுள்ள தாதிப்பெண்களால் (Ayahs) பராமரிக்கப்படுவதால் சன்மார்க்கத்தைக் கைவிட்டுவிடுகின்றார்கள். "The hand that rocks the cradle rules the world" அதாவது தொட்டிலை ஆட்டும் கையே உலகத்தை ஆளும் என்பார்கள். பிள்ளைப் பராமரிப்பைவிட மேலான உத்தியோகம் பெண்களுக்கில்லை. எண்ணறக் கற்று எழுத்தறவாசித்தாலும் பெண்புத்தி பின்புத்தியே. O woman, thy name is frailty "ஒருபெண்ணே உன் பெயர் நிலையாமை" எனச் செகஸ்பியர் (Shakes peare) கூறுகின்றார். பெண்கள் ஆண்களுக்காகவே சிருஷ்டிக்கப் பட்டவர்கள். 'Woman was made for man' என ஆங்கிலத்தில் மில்றன் கூறுகின்றார். ஆகவே நிலையற்ற மனப்பான்மையுடைய பெண்களை நிலையான முறையிற் பழக்கி அவர்களின் ஒழுக்கத்தைப் பேணுவது ஆண்களின் கடமையே.

"தந்தையாயினும் விழைவிற் றன்னுடனே
பொரு வயிற்றிற் சார்ந்தாரேனும்.

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

"சர்வகலாசாலைகளிலும் தாய்மொழிகளை உபயோகிக்க"

கல்வி விசாரணைக் குழுவினர்முன், வட இலங்கை ஆசிரியர்களின் ஆலோசனை

அந்நிய நாட்டார் பரீக்ஷைகள் அறவே ஒழிந்து உள்நாட்டார் பரீக்ஷைகள் உண்டாக வேண்டும்

யாழ்ப்பாணம், திங்கள்
வடமாகாண ஆசிரியர்சங்கத்தின் தூதுக்கோஷ்டி யொன்று திரு. A. குமாரசுவாமி யவர்கள் தலைமையில் விசேஷ வித்தியா விசாரணைச் சபையைப் பேட்டி கண்டு பேசியது. இத் தூதுக்கோஷ்டியின் ஏனைய அங்கத்தவர்கள் மிஸ்டர் ஜே. ஜீ. சார்ள்ஸ், திருவாளர்கள் C. சுப்பிரமணியம், S. அம்பிகைபாகன் ஆகியோராவர். தூதுக் கோஷ்டிக்குத் துணைபுரிவதற்காக அகில இலங்கை ஆசிரியர் சங்கத்தின் காரியதரிசி திரு. கே. நேசையாவும் சமுகமாயிருந்தார்.

இலங்கையிலுள்ள பாடசாலைகளிலும், இலங்கைச் சர்வகலாசாலையிலும் கல்வி கற்பிப்பதற்குரிய பாஷை சிங்களம் அல்லது தமிழாக இருந்தால் நலமென்று தூதுக் கோஷ்டி ஆலோசனை கூறியது.

ஆரம்பப் பாடசாலைகளில் ஆங்கிலத்தையேனும் அல்லது வேறு இரண்டாவதொரு பாஷையையேனும் புகுத்துவதைத் தாம் விரும்பவில்லையென்றும் சிங்களம் அல்லது தமிழையே அங்கு கல்வி கற்பிப்பதற்குரிய பாஷையாகக் கொள்ள வேண்டுமென்றும் தெளிவாகத் தாம் கூறுவதாகவும் திரு. குமாரசுவாமி அவர்கள் தெரிவித்தார்.

வெவறண்ட R. S. de. சேரம் கேட்ட கேள்வியொன்றிற்குப் பதிலளிக்கும் முகமாக திரு. குமாரசுவாமி யவர்கள் கூறியவை வருமாறு:— சர்வகலாசாலையில் சிங்களத்தில் அல்லது தமிழிற் பேராசிரியர்கள் தமது பாட விரிவுரைகளை நிகழ்த்துவதில் எவ்வித கஷ்டமும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. மாணவர்கள் சாதாரணமாக வேலைகளைச் செய்து கொள்வதற்கு வேண்டிய அறிவை ஆங்கிலத்தில் உடையவர்களாகவும் ஆங்கிலப் புத்தகங்களை வாசிக்கக் கூடியவர்களாகவும் இருக்கலாம். வேற்று நாட்டார் பெரும்பாலும் குறைந்த ஆங்கில அறிவோடேயே ஆங்கில சர்வகலாசாலைகளில் கற்பிக்கப்படுங் கல்வியைத் தொடர்ந்து பின்பற்றக் கூடியதாக விருக்கின்றது.

திரு. S. நடேசன்:— இலங்கையில் இரண்டு சர்வகலாசாலை யிருப்பது உங்களுக்கு விருப்பமா?

திரு. குமாரசாமி:- எவ்வளவுக்கு அதிகமான சர்வகலாசாலைகள் இருக்குமோ அவ்வளவுக்கு நல்லதே.

இப்போது ஆங்கிலப் பாடசாலைகளுக்கு ஆதரவு இருப்பதற்குக் காரணங்கள் ஆங்கிலம் அரசாங்க பாஷையாக இருப்பதும் ஆங்கிலமே உத்தியோகம் பெறுதற்கு இன்றியமையாதிருப்பதும் ஆகும். அரசாங்க உத்தியோகங்களுக்கும் சிங்களம் தமிழ்ப் பாஷைகளையே வழங்குவாராயின், அவ்வுத்தியோகங்களுக்குரிய பிரவேச பரீட்சைகள் அப் பாஷைகளிலேயே நடைபெறுமாயின், பெற்றோர் இப்போது ஆங்கில பாஷையிற் கொண்டுள்ள ஆர்வத்தைப்போலத் தாய்ப்பாஷையிலும் ஊக்கமும் ஆர்வமும் எடுத்துக் கொள்வார்கள்.

பிள்ளைகள் தம் சொந்தப்பாஷையிற் போதிய அறிவு பெறக் கூடியதாக அவர்களைச் செய்வதே ஆரம்பப் பாடசாலைகளின் நோக்கமாக இருத்தல் வேண்டும். ஆரம்பப்பாடசாலைகளின் வேலைகளைப் பாடங்களாகப் பிரித்து பலவேறு பாடப் புத்தகங்களை உபயோகிக்கச் செய்யும் புதிய வித்தியாபகுதிப் பாடத்திட்டம் கண்டிக்கத் தக்கது.

அந்நிய பரீக்ஷைகள்

பரீக்ஷைகள் சம்பந்தமாகப் பேசும்போது, அந்நிய நாட்டாரால் பரீக்ஷிக்கப்படும் பரீக்ஷைகளனைத்தும் அறவே நீக்கப்பட வேண்டுமென்றும், உள்நாட்டாரால் நடாத்தப்படும் பரீக்ஷைகள் எவ்வளவு குறைபாடுடையதாயினும் அவையே பிறநாட்டாரால் பரீக்ஷிக்கப்படுவதைக் காட்டிலும் விரும்பத்தக்கது என்று தூதுக்கோஷ்டியார் தெரிவித்தனர்.

பரீக்ஷைகளின் சபை சம்பந்தமாகத் தெளிவான சில ஆலோசனைகளைத் தமக்குப் பின்னர் அனுப்பி வைக்கும்படி கல்வி மந்திரி திரு ஸி டப்ளியூ. டப்ளியூ. கன்னங்கரா கேட்டுக்கொண்டார்.

பாடசாலைகள் அரசாங்கத்தின் முகாமையின் கீழ் இருப்பதையே சங்கம் விரும்புவதாகக் கூறப்பட்டது. அரசாங்க, ஆரம்ப, அதற்கு மேற்பட்ட பாடசாலைகள் ஆகிய இவற்றிற்கே அவர்கள் பொதுவாகத் தம் கருத்திற் கொண்டு கூறியதாகச் சொல்லப்பட்டது. மலையாவில் இருப்பது போல, குருக்களமாரை வேலைக்கமர்த்தி அவர்களுக்குக் குறைந்த சம்பளம் கொடுப்பது கட்டுப்படுத்தப்பட வேண்டுமென்றும் தூதுக்கோஷ்டியார் ஆலோசனை கூறினர்.

ஆசிரியர்கள் சம்பந்தமாகப் பேசும்போது, எல்லா ஆசிரியர்களும் பயிற்றப்பட்டவர்களாயிருத்தல் வேண்டுமென்றும், உயர்தரப் பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்கள் பி. ஏ. அல்லது B S C பட்டம் பெற்றவர்களாய்ச் சர்வகலாசாலையிற் பயிற்றப்பட்டவர்களாயிருத்தல் வேண்டுமென்றும் மேலே கூறிய மூன்று விதமான பாடசாலைகளுக்கும் தனித்தனி தகுதிவாய்ந்த சம்பளத் திட்டம் இருத்தல் வேண்டும் அது நாட்டின் எந்த இடத்திலும் ஒரேவிதமானதாக இருத்தல் வேண்டுமென்றும் பட்டினசபை எல்லைக்குள் மாத்திரம் ஒரு வீட்டுவாடகை (அலவன்ஸ்) கொடுக்கப்படலாமென்றும் பாடசாலைகளை A, B என்று பிரியாமல் நிறைமைப்படிகள் உண்டுபடுத்தப்படவேண்டுமென்றும் ஆலோசனை கூறப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் B வகுப்புப் பாடசாலைகளால் ஏற்பட்டுள்ள விசேஷ இடர்ப்பாடு எடுத்துக்காட்டப்பட்டது. யாழ்ப்பாணம் உயர்தரப்பாடசாலைகளில் B வகுப்பை ஏற்படுத்தியமைக்கு ஸேர். பொன்னம்பலம் இராமநாதனவர்களே காரணர் என்றும் தாம் அவ்விஷயத்தைப் பற்றிப் பரிசீலனை செய்வதாகவும் தலைவர் கூறினர்.

எல்லாப் பாடசாலைகளும் ஒரே சமயத்தில் A வகுப்பு முறையை அநுசரிக்கவேண்டுமாதலால், அரசாங்கத்தார் அவ்வாறு அநுசரிக்க வேண்டியதை வற்புறுத்த வேண்டியிருக்கிறது என்று திரு. குமாரசுவாமி எடுத்துக் காட்டினர். மற்ற இடங்களிலுள்ள வாழ்க்கைச் செலவைக் காட்டிலும் யாழ்ப்பாணத்திலுள்ள வாழ்க்கைச் செலவு எவ்வாற்றானும் குறைந்ததல்லவென்றும் யாழ்ப்பாணத்திலுள்ள அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்குச் சேவிக்கும் அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்குரிய சம்பளம் தேவைப்படுகின்றதென்றும், மிஸ்டர் சார்ள்ஸ் குறிப்பிட்டார். B வகுப்புப் பாடசாலைகள் சம்பந்தமாக யாழ்ப்பாண ஆசிரியர்களுக்குள்ள குறைகள் நிவர்த்திக்கப்படுமென்று தாம் நம்புவதாகவும் அவர் தெரிவித்தார்.

ஆராய்ச்சி

சங்கம் ஆராய்ச்சித்துறையை ஊக்குவிக்கும் கருத்துடையதென்றும், கல்வி விஷயங்கள் நன்றாக ஆராயப்பட வேண்டும் என்றும் தூதுக் கோஷ்டி கூறியது.

கல்விக்காகக் கொடுக்கப்படும் 'ஸீவு' விகித நோக்கிற் கருதப்பட்டு இலங்கையிலோ வெளிநாடுகளிலோ செய்யப்படும் எந்த விசேஷ ஆராய்ச்சியையும் உள்ளிட்டதாக இருக்க வேண்டுமென்று திரு. சுப்பிரமணியம் ஆலோசனை கூறினர். இலங்கைப் பாடசாலைகளுக்குத் தேவையான புதிய புத்தகங்கள் மொழிபெயர்ப்புக்கள் இவ்வாறு வரலாமென்றும் கூறப்பட்டது. விசேஷ கல்விக்காக வித்தியாபகுதி உத்தியோகஸ்தர்கள் பிறநாடுகளுக்கு அனுப்பப்படும்போது, அவ்வாறு அனுப்பப்படுவோர் வயதில் இளைஞர்களாகத் தெரிந்தெடுக்கப்பட வேண்டுமென்றும் அங்ஙனஞ் செய்தாற்றான், அவர்கள் தம பயிற்சி பெற்றபின் பல வருஷங்களுக்குச் சேவை புரியக் கூடியதாயிருக்குமென்றும் திரு. சுப்பிரமணியம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்திலுள்ள ஒடுக்கப்பட்ட சாதியாரின் சார்பாகச் சாக்ஷியங் கூறிய மிஸ்டர். ஜேக்கப், ஒடுக்கப்பட்டசாதியாரின் பிள்ளைகளுக்காகத் தனித்து ஒரு பாடசாலை திறக்க வேண்டுமென்று கூறப்பட்ட ஆலோசனை தாழ்ந்த வகுப்பாருக்குச் செய்யப்படும் தகுதியற்ற தீமையாகும் என்று வாதித்தார்.

மேலும், யாழ்ப்பாணத்திலுள்ள தாழ்ந்த வகுப்புத் தமிழர்களின் தொகை 70,000 என்றும் அவர்கள் பிள்ளைகளில் 100க்கு 90 பேரும் இந்துக்களென்றும், அவர்களிற் பெரும்பான்மை மாணவர்கள் கிறிஸ்தவ மிஷன் பாடசாலைகளிலேயே கல்விகற்று வருகின்றார்களென்றும், மிகப் பழங்காலந் தொடக்கமாக கிறிஸ்தவ மிஷனரிமார் தாழ்ந்த வகுப்பாரில் மிக்ககரிசனை எடுத்து வருகிறார்களென்றும் அவர் எடுத்துக் காட்டினர்.

21 வயதுள்ள பிரித்தானிய பெண்கள் பதிவு

லண்டன், மே 3

பிரிட்டனெங்குமுள்ள 21 வயதுள்ளபெண்கள் இன்று 12,000 மத்திய ஸ்தலங்களிற் பதிவு செய்யப் பட்டனர். இப்பெண்கள் தாதித்தொழில் முதலிய சேவைகளுக்குப் பயிற்றுவிக்கப் படுவார்களென்று தெரிகிறது.

படாக்ளியோவின் புதல்வன் பரமபதம் அடைந்தார்

லண்டன், மே 3

இத்தாலிய இராணுவத்தின் பிரதம அதிகாரியாக இருந்த மார்ஷல் படாக்ளியோவின் மகன் பாலோ படாக்ளியோ வியாழக்கிழமை வட ஆபிரிக்காவில் நடந்த ஆகாயச் சண்டையிற் கொல்லப்பட்டதாக ஜெர்மன் செய்தி ஸ்தாபனம் அறிவிக்கின்றது.

கடவுளைப் பற்றிய நம்பிக்கை

இது 16-3-1941ல் மயிலை கிழார் இளமுருகனார் நிகழ்த்திய மணிவிழாச் சொற்பொழிவின் ஓர் பகுதி.

கடவுள் ஒருவர் உண்டென்றும், அவர் உலகெலாமாகி வேறாய் உடனுமாயிருக்கிறாரென்றும், அவருக்குச் சொரூபலக்கணமும் தடத்தலக்கணமும் உண்டென்றும், அவரை எண்குணமுடையாராகக் கருதுவது அறிவுக்குப் பொருத்தமென்றும், இவ்வுலகுக்குக் கடவுள் வேண்டா அறவொழுக்கமே சாலும் என்ற நாத்திகக் கொள்கை பெருந்தவறுடைத்தென்றும் நான் மிக உறுதியாகவும் அழுத்தமாகவும் நம்புகிறேன். கடவுள் ஒருவர் உண்டென்பதற்கு உத்திகளிலும் உயர்போதம் சித்தி முதலிய சாத்திரங்களுள் பதியுண்மைக்குக் கூறப்படும் காரணங்களோடு மேலைநாட்டறிஞர்கள் கூறும் காரணங்களையும் நான் இயன்றளவு ஒப்பிட்டறிந்து மகிழும் பழக்கமுடையவன். மேலைநாட்டறிஞர்கள் தங்கள் காரணங்களை இயற்கை யமைப்புப் பிரமாணம், சுவாநுபவப் பிரமாணம், அறநெறிப் பிரமாணம், குறிக்கோள்வகைப் பிரமாணம், தொழிற்படுமுறைப் பிரமாணம், புறத்தோற்றவுண்மைப் பிரமாணம், நம்பிக்கை யுரிமைப் பிரமாணம், என்று எழுவகையாகப் பாகுபடுத்திக் கூறுகின்றனர்.

கடவுள் உலகெலாமாகி வேறாய் உடனுமிருத்தல், சொரூபலக்கணம் தடத்தலக்கணம் உடையராதல் என்ற கொள்கைகட்கு மேற்கூறிய நூலோடு Dr. A. N. Whitehead's "Religion in the Making" என்ற நூலில் 56-60 ஆம் பக்கங்களில் the Doctrines of Immanence and Transcendence என்பவற்றை விவரிப்பதையும் ஆதாரமாகக் கொள்க. இக்கொள்கைகளின் நுட்பங்களையெல்லாம் சிவஞான பாடியம் மிகத் திறமையாக விளக்குவதோடு "அத்வைதம்" என்ற பொருளுக்குச் சித்தாந்த சைவர் கூறுவதை மிகத் தெளிவாக எடுத்துரைக்கின்றது.

கடவுளை எண்குணமுடையாராகக் கருதுவது பற்றிச் சில சொல்ல விரும்புகிறேன். ஒவ்வொரு நாட்டினரும் தத்தம் நாகரிக நிலைக்கேற்றவாறு பல உயர்ந்த ஒழுக்கங்களையும் குறிக்கோள்களையும் உடையவராகின்றார்கள். இவ்வொழுக்கங்களையும் குறிக்கோள்களையும் திரட்டி அவை யனைத்தையும் உடையவர் தங்கள் கடவுள் என்று கொள்கிறார்கள். இது எல்லாச் சமயங்களுக்கும் பொதுவான ஒரு வழக்கம்.

இவ்வுலகப் பொதுமுறையை ஒட்டியே நமது சமயத்திலும் பேரறிவுடைமை, பேராற்றலுடைமை, பேரின்பமுடைமை பேரருள் உடைமை, தூய்மை முதலிய எட்டுக் குணங்களை யுடையராகக் கடவுள் கருதப்படுகிறார். மக்களுக்கு வேண்டப்படும் சிறந்த ஒழுக்கங்களெல்லாம் இவ்வெட்டினுள் அடங்கும். இவ்வெட்டைச் சுருக்கி ஆறாகவும் மூன்றாகவும் தொகுத்துக் கடவுளை ஷாட்குணயஸ்வரூபியென்றும் சச்சிதானந்தப் பொருள் என்றும் கூறுவதுமுண்டு. குணங்களுடையாராக மேற்கண்டபடி கடவுள் எண்ணப்படுவதால் அவரைச் சகுணப்பிரமம் என்பாருமுண்டு.

அறவொழுக்கமே சாலும், கடவுள் உண்டென்று கூறவேண்டிய அவசியமில்லை யென்ற கொள்கை பண்டைக் காலந்தொட்டு இன்றுவரை சிற்சில அறிஞர்கள் மனத்தை அலைத்து வந்துள்ளது. இதைப்பற்றி நமது சாத்திரங்கள் ஆராய்ச்சி செய்துள்ளன. சிவஞானசித்தியார் பரபக்கத்துள் இக்கொள்கை பூர்வபக்ஷம் செய்யப்பட்டுள்ளது. மேலைநாட்டறிஞர்கள் பலரும் இதைப் பூர்வபக்ஷம் செய்துள்ளனர்.

சுருக்கக் கூறின் மனிதன் நல்லொழுக்கம் சரியென்றும் தீயவொழுக்கம் தவறென்றும் உணர்கின்றான்; இவ்வுணர்ச்சிக்குக் காரணம் நன்மை செய்வதே சரியென்ற கொள்கையுடைய நன்மை யுருவாய மூல காரணப் பொருள் ஒன்றின் உண்மையேயாகும்; நன்மையாகவும் உண்மையாகவும் ஒழுக்கமாகவும் அன்பாகவும்உள்ள ஒரு மூலப்பொருள் அறிவு இச்சை தொழில் உடையதாக இருத்தல் வேண்டும் என்பது.

சிலர் இயற்கை யமைப்பிலேயே இவையெல்லாம் உண்டு கடவுள் ஒருவர் வேண்டா என்று எண்ணுதல் கூடும். இது தவறான கொள்கை. இயற்கையை ஆராய்ந்து பார்த்தால் அறவுணர்ச்சி இறந்தே படும் என்று கூட இயம்பலாம்.

தகுதிப்போரில் வெற்றி பெறுவதே நிலைத்திருக்கும் ஏனைய அழிந்து படும் என்ற இயற்கை விதியை நோக்குமிடத்து எளியதை வலியது வாட்டிக் கொள்ளும் முறையே காணப்படுவதால் ஹிம்சையும் தன்னலமுமே இயற்கையிற் சிறந்த பண்புகளாகும். தகுதியில் மிக்கது நிலைத்திருக்கும் என்றவிடத்துச் சூழ்பொருள் சார்புப் பொருள்களோடுபோர்புரிந்தோ நட்புக்கொண்டோ வெற்றிபெறும் தகுதியொன்றே கருதப்படுகிறதென்றும், நன்மை தீமை, அழகு, கோரம், அன்பு வன்கண்மை முதலியவற்றைப் பற்றிய தகுதியும் தகுதியின்மையும் கருதப்படுவதில்லை யென்றும் நினைவு கூர்தல் வேண்டும். எனவே இயற்கைக்கும் அறத்துக்கும் சம்பந்தமில்லை யென்பது புலப்படும். இதைத்தான் Nature is immoral என்று கூறுமல் Nature is non moral என்று சிறிது மரியாதையாகவே பேகர் துரைமகனார் சொல்லுகிறார். குறைந்த இடர்வழி line of least resistance இயற்கையின் வழி. அறநெறியோ இடர்மிக்கது. Moral action is the line of the greatest resistance என்று ஆசிரியர் மக்டூகல் கூறுகிறார். கடவுளைச் சத்தென்றும் உலகத்தை அசத்தென்றும் ஆன்மாவைச் சதசத்தென்றும் கொள்ளும் சைவ சித்தாந்த உண்மை ஒன்றிலேயே வைத்து இவைகளை விரித்துக் கூறலாம்.

உலகத்தில் அறவொழுக்கம் நிலைத்திருப்பதற்குக் கடவுள் உண்டென்ற கொள்கை மிக அவசியமென்பதை வேறு பல காரணங்கள்மூலமாகவும் விளக்கலாம். மக்களிடையே சமயவுணர்ச்சியும் அறவுணர்ச்சியும் தோன்றி வளர்ச்சி பெற்ற வரலாற்றை ஆராய்ந்து பார்த்தால் முதலிற் றோன்றியது சமயவுணர்ச்சி யென்றும் பின்னர் நெடுங்காலம் கழித்துத் தோன்றியது அறவுணர்ச்சி யென்றும் அறியப்படும். Man was religious much earlier than when he began to be moral. இயற்கை நிகழ்ச்சிகளாகிய மழை இடி மின்னல் முதலியவற்றைக் கண்டு பயந்து அவற்றின் காரணத்தை யறியாது அவ்வொவ்வொன்றையும் ஒரு கடவுளாக எண்ணி வணங்கிய மிகப் பழங்காலத்திலேயே மனிதனுக்குச் சமய வுணர்ச்சி உண்டாயிற்று.

—வரும்

(சித்தாந்தம்)

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

இந்து சாதனம்.

யாழ்ப்பாணம் விஷு-ஹூ
சித்திரைமீ உகூ வியாழக்கிழமை

சமயச் சார்வு பற்றிய கலாசாலைகள்

சமயச்சார்பு பெற்றனவாய் இலங்கையிலுள்ள ஒவ்வொரு சமய வாதிகளாலும் நடத்தப்படும் வித்தியாசாலைகள் ஆவசியகமோ, அப்படியான வித்தியாசாலைகட்கு அரசினர் பண உதவி செய்வது முறையோ இல்லையேல் இந்நாட்டிலுள்ள வித்தியா சாலைகளெல்லாம் அரசினர் மூலமாக நடத்தப்படலாமோ என்ற ஆசங்கை இப்பொழுது வித்தியாதிகாரிகளுக்கிடையே பிறக்கலாயிற்று. இந்நாட்டில் ஊட்டப்படுங் கல்வி விஷயமாக விசாரணை செய்து ஆகவேண்டிய திருத்தங்களை ஆக்கி வைக்கும் நோக்கமாக விசேஷமாய் இப்பொழுது நியமிக்கப் பெற்ற கல்வி விசாரணைச் சங்கத்தார் ஊர்தோறும் சென்று விசாரணை நடத்தி வருகிறார்கள். அவர்கள் யாழ்ப்பாணத்திற்குச் சில தினங்கட்கு முன் வந்து இங்குள்ள ஆசிரியர்கள் வித்தியாபிமானிகளிடம், விசாரணை செய்தபோது மேலே சொல்லப்பட்ட சமயச்சார்பு பற்றிய வித்தியாசாலைகள் ஆவசியகம் இருக்க வேண்டுந்தானே என்னும் விசாரணையும் நிகழ்ந்தது. இங்குள்ளார்பலர் அது இருக்கத்தான் வேண்டுமென்று கூற, சிலர் வேண்டாமென்றுங் கூறினர்; இந்நாட்டிலே தம் மதத்தைச் சைவ பௌத்த மதத்தினர்க்கிடையே பரப்பும் நோக்கமாக வந்த அந்நியமதத் தலைவர்கள் சிலரும் சமயச்சார்பான வித்தியாசாலைகள் இருக்கத்தான் வேண்டுமென்று சாட்சியம் பகர்ந்தனர். அவர்கள் அப்படிச் சொல்லும் நோக்கம் வேறு. இலங்கையிலுள்ள சைவமக்கள் பௌத்தமக்கள் அப்படியான சமயச்சார்பு பற்றிய வித்தியாசாலைகள் இருக்கத்தான் வேணுமென்று வாதிக்கும்நோக்கம் வேறாகும். இலங்கையில் ஒருபாலாரால் அநுஷ்டிக்கப்படும் இஸ்லாமைப்பற்றி நாம் இங்கே எடுத்துக் காட்டாமல் விட்டதற்குரிய நியாயம் இஸ்லாமியரிடத்தில் மதமாற்றஞ் செய்தல் அந்நிய மதத்தினர்க்கு அசாத்தியமென்பதனாலாம்.

இங்குள்ள சைவமக்களாகிய எங்கள் விஷயத்தில், சமயச்சார்பு பற்றிய கலாசாலைகள் பயன்படுமேயொழியச் சமயச்சார்பு அற்ற கலாசாலைகள் ஒருவாற்றானும் பயன்படா; அவை பயன்படா தொழிவதோடு மாத்திரம் நின்றுவிடமாட்டா; அப்படிப்பட்ட கலாசாலைகளிற் சைவப்பிள்ளைகள் கல்வி பயிலப் புகுவதனால் அதிக அநர்த்தம் விளையுமென்பது திண்ணம். சைவப்பிள்ளைகட்குச் சைவசமய உபாத்தியாயர்களாற் சைவ முறைப்படி பயிற்றப்படும் சைவச்சார்புபற்றிய கலாசாலைகள் இன்றியமையாதன. "கற்றதனாலாயபயனென் கொல்வாலறிவன் — நற்றாள் தொழாஅரெனின்" என்பதும் "அறம் பொருள் இன்பம் வீடடைதல் நூற்பயனே" என்பதுமே கல்வி விஷயமாக நஞ் சைவமக்கள் கொண்டுள்ள இலக்காகும். இப்படியே இலங்கையிலுள்ள பழைய மார்க்க வாதிகளாகிய பௌத்தர் இஸ்லாமியர் விஷயத்திலும் சொல்லலாகும். கிறீஸ்து மார்க்கத்தினரும் தம் மதத்தைப் பிறமதப் பிள்ளைகட்கிடையே பரப்பும் நோக்கமின்றித் தம் மார்க்கத்தையே அநுசரிக்கும் பிள்ளைகளைக் கொண்ட கலாசாலைகளில் தம் மதத்தைப் போதிப்பரேல் அப்படியான கலாசாலைகளையும் மதச்சார்பு பற்றிய கலாசாலைகளாக மதித்து அரசினர் உதவி செய்தல் வேண்டும். இல்லையேல் ஒரு சமயத்து மக்கள் கொடுக்கும் அரசிறைப் பணத்தை அச்சமயத்தவர்களின் நோக்கத்திற்கு நேர்விரோதமாக, இன்னொரு சமயத்தைத் தங்கள் பிள்ளைகட்கே பரப்புதற்கு உபயோகித்தலாகிய பெருந் துரோகம் ஏற்படுமன்றோ!

இலங்கையிலுள்ள கிறீஸ்தவ கல்லூரிகள் கலாசாலைகளெல்லாம் இங்குள்ள ஏனைய மார்க்கத்துப் பிள்ளைகளைத் தம் மதத்திற்கு இழுக்கும் நோக்கமாகவே நடத்தப்படுகின்றன வென்பதைக் கிறீஸ்துமார்க்க அதிகாரிகளே ஒத்துக்கொள்வார்கள். இங்குள்ள கிறீஸ்தவ கலாசாலைகளிற் பயிலும் பிள்ளைகளுள் நூற்றுக்குத் தொண்ணூறு விகிதமானோர் வேறு மார்க்கங்கட்குரிய பிள்ளைகளென்பது பலரும் அறிந்த இரகசியம். இந்த நிலையிலுள்ள கலாசாலைகளை எந்தச் சமயச் சார்பு பற்றிய கலாசாலைகளென்று உரைப்பது? இவ் வித்தியாசாலைகளை வைத்து நடத்துவோர்களைக் கொண்டே இக் கலாசாலைகளின் சமயச் சார்பை நிச்சயிப்பதென்ற நியதியிருந்தால், இவைகளைக் கிறீஸ்து சமயச் சார்புபற்றிய வித்தியாசாலைகளெனலாம். இவ்வித்தியா சாலைகளிற் பயிலும் பிள்ளைகளுட் பெரும்பான்மையினரின் மதக்கொள்கையைக்கொண்டு நிச்சயிப்பதாயின் சைவசமயச்சார்பு இல்லையேல் பௌத்தசமயச் சார்பு பற்றிய கலாசாலைகளென்றே சொல்லல்வேண்டும். வித்தியாசாலையிற் பயிலும் பிள்ளைகளின் பெருந் தொகுதியைக் கொண்டே சமயச்சார்பு விதிக்கப்படல் வேண்டுமென்பது தான் முறை.

இதுமாத்திர மல்லாமல், இன்னுமொரு இடையூறு நேர்கின்றது; அஃதென்னையெனிற் சொல்லுதும்; வேலையின்றித் திண்டாடும் இக்காலத்திலே, சைவசமயத்தைச் சேர்ந்த உபாத்தியாயர்களும் பௌத்த மதத்தைச் சேர்ந்த உபாத்தியாயர்களும் அநேகர் படிப்பிப்பதற்குச் சைவ வித்தியாசாலைகளிற் பிள்ளைகள் குறைவினால், வகையின்றி வேலைபற்றுச் சும்மா திரிய, சைவப்பிள்ளைகளையும் பௌத்தப் பிள்ளைகளையும் கொண்ட கலாசாலைகளில் அந்நியமத உபாத்தியாயர்கள் தொழில் பெற்றுக் கடமை பார்த்து வேதனம் பெறுகின்றார்கள். இங்ஙனம் சமயப் பிரசாரணஞ் செய்யும் நோக்கமாக வேற்றுச் சமய வாதிகளால் வைத்து நடத்தப்படும் பள்ளிக்கூடங்கள் வாயிலாக நேரும் அநர்த்தங்கள் இன்னும்பல. அவற்றையெல்லாம் ஈண்டு உரைக்கப்புகின் பரக்குமென விடுத்தேம்.

ஒவ்வொரு சமய வாதிகளும் தாம் தாம் வைத்து நடாத்தும் வித்தியாசாலைகளில் தங்கள் சமயத்தைச் சேர்ந்த பிள்ளைகட்கு மாத்திரம் தம் சமயத்தைப் போதிப்பதோடு நிறுத்திக்கொண்டு, அந்நிய சமயப் பிள்ளைகள் அங்கு படிக்க நேர்ந்தால் சமயதொடர்பாக அப்பிள்ளைகள் விஷயத்திற் சிறிதேனும் அவ்வதிகாரிகள் பிரவேசியாதொழிதல் வேண்டும்; உதவி நன்கொடைப் பணம் உதவும்போது, ஏனைய சமயப்பிள்ளைகளைக் கணக்கிற் சேர்த்தலின்றித் தம் சொந்தச் சமயப் பிள்ளைகளின் பொருட்டே அப் பணத்தை அவ்வித்தியாசாலை யதிகாரிகள் பெறத்தக்கதாக அரசினர் செய்தல் வேண்டும். இந்த முறையையே எங்கள் அரசாங்க வித்தியாபகுதியாரும் ஆதரித்தல் வேண்டும். எச்சமயக் கல்வித் தொடர்பும் பற்று அரசினர் வித்தியாசாலைகள் அமையாவோவெனின், அவை ஒருபோதும் அமையா; ஏன்? அக்கலாசாலைகளிற்பயிலும் பிள்ளைகள் தத்தம் மார்க்கக் கல்வியின்றி அதனாற் சமயப்பற்றற்று ஈற்றில் அதோகதியடைய நேருமென்ற காரணத்தினாலாம்.

உலகம்பலவிதக்கதை

"என்பொருட்டாயினும் மறுக்காதீர்கள்"

சுந்தராம்பிகை தன் தமக்கை அறையுள் தனியே இருக்குஞ் சமயம் பார்த்து அங்கே போய் அவள் பக்கலில் இருந்துகொண்டு "அக்கா, சந்தோஷப்படவேண்டிய நேரத்தில துக்கமாக இருக்கிறீர்கள்; ஏன், அக்கா, அப்படியிருக்கிறீர்கள்? நான் உங்கள் அன்பான தங்கையல்லவா, எனக்குச் சொல்லவொண்ணாதா? நேற்றுத் தொடக்கம் நீங்கள் கவலையோடு கூடியிருப்பதைக் கண்டு எங்கள் தகப்பனாரும் கவலைப்படுகின்றார். உங்கள் கலியாணம் விரைவில் நடக்கப்போகிறதெனக் கேட்டுச் சந்தோஷப்பட்ட நானும் உங்களைப் பார்த்துக் கவலையானேன். என் துயரத்தை நீக்குவதற்காகவாயினும் எனக்கு உள்ளதை வெளியிடக் கூடாதா? அக்கா, நீங்கள் வருந்தாதீர்கள்; என மனத்தை வருத்தாதீர்கள்; உங்கள் சஞ்சலத்திற்கு ஏது என்ன வென்பதை உங்கள் உடன்பிறப்பாகிய எனக்குச் சொல்லுங்கள்" என்று பரிவுடன் கேட்டாள். "கண்ணே, கவலைப்படவேண்டாம்; நீ என் பக்கத்தில் இருக்க எப்படியான கவலையும்குறைந்துவிடும்; எனக்கு வேறு ஒரு மனவருத்தமுமில்லை. எங்கள் ஐயா இப்பொழுது என் கல்யாணத்தை நிறைவேற்றிவிடவேண்டுமென்று அவசரப்படுகிறார்; அதுதான் அம்மா, எனக்குப் பெருங் கவலையாயிருக்கிறது. எல்லாம் அறிந்த எங்கள் தகப்பனார் இப்படிச் செய்யத் துணிந்தால் அவரை யார் தடுப்பது? அவருக்கு ஆர் புத்தி சொல்லுவது? காலமும் இடமும் வசதியும் பார்த்தல்லவா இப்படியான கருமங்களைச் செய்ய உத்தேசிக்கவேண்டும்......." என்று அமுதாம்பிகை சொல்லி முடிப்பதற்கிடையிற் சுந்தரம் "அக்கா, இப்பொழுது எங்களுக்கு வந்த வசதியீனமென்ன? உங்கள் விவாகத்தைச் சீக்கிரத்தில் நிறைவேற்றி வைப்பதற்காகிய நியாயமென்னவென்பதை அன்றைக்கு எங்கள் அப்பர் நாங்கள் எல்லாரும் ஒருமித்திருக்குஞ்சமையத்திற்றானே சொன்னார். அவர் சொன்ன நியாயஞ் சரிதானே; இந்த நேரத்தில், அக்கா, நீங்கள் ஒன்றையும் குழப்பாதீர்கள்; நீங்கள் உடன்படாமல் நின்றால், எங்கள் ஐயா கவலைப்படுவார். நான் துயரமடைவேன்; என் அருமையான அக்கா, நான் துயரப்பட்டால் நீங்கள் சகிக்கமாட்டீர்களல்லவா; ஆனதால் என்னை வேணுமானால், நான் மன ஆறுதலாக இருக்க வேண்டுமென்று நீங்கள் விரும்பினால், எனக்காக இப்பொழுது சந்தோஷமாய் விவாகத்திற்குச் சம்மதியுங்கள்" என்று பின்னரும் சுந்தராம்பிகை தன் சகோதரியை இரந்தாள். "கண்ணே சுந்தரம், நீ சொல்லும் அன்பான சொற்களும் உன் மனம் படும்பாடும் என் கவலையை அதிகப்படுத்துகின்றன. தங்காய், நான் சொல்லும் நியாயத்தைக் கேட்டுக்கொண்டு அதன்பின் நீ ஏதுஞ் சொல்லவிருந்தாற் சொல்லு கண்ணே. உனக்கென்று வெகுநாளாய நியமிக்கப்பட்டிருந்தவர், எங்கள் மைத்துனர் விளக்கமறியலிலிருக்க, உனது விவாகத்திற்கு ஒரு முற்றுமில்லாமற்போக, உனது அக்கா என்றிருக்கும் நான் இந்த நேரத்தில் விவாகஞ் செய்யவு தென்றால் அதற்கு என் மனம் இடந்தருமா? உலகம் ஒப்புக்கொள்ளுமா? ஆகக் கொண்டாட வேண்டிய நேரத்தில் சந்தோஷங் கொண்டாட முடியுமா? தங்காய், என் தாய் வேறு, உன் தாய் வேறு என்ற நியாயம்பற்றி என்னைப் புறக்கணிக்கின்றாயா? தாயார் இருவரானாலும் எங்களைப்போல் உற்ற சகோதரங்கள் உலகத்தில் அரிதெயல்லவா; ஆனதால் உனது கருமமே நிறைவேறவேண்டும் கண்ணே; உன் வாழ்வு என் வாழ்வாகும்; உன் கவலை என் கவலையாகும். கண்ணே, நானும் நீயும் வேறல்லவே; எனக்கு விவாகமே வேண்டாம்; நான் முந்திச் சொன்ன பிரகாரம் நீர் விவாகஞ் செய்து சீரகச் சிறப்பாக வாழக் கண்டு மகிழ்வதே எனக்குப் பெரும் பாக்கியமாகும். இதற்கு அலைச்சொல்ல வேண்டாம்; என் கண்ணே" என்று அமுதாம்பிகை கண்களில் நீர் ததும்ப, தன் சகோதரியை ஒரு கரத்தால் அணைத்துக்கொண்டு அவள் முகத்தை மறுகரத்தால் தடவியபடி உள்ளமுருக அன்புபெருகச் சொன்னாள். கேட்ட தங்கை பதிலொன்றும் பகர அறியாளாய்க் கலங்கினாள்.

"இனி நிறைவேறும் என் மனோரதம்"

'அம்மா, அக்காவுக்குச் சம்மதமில்லை; எங்கள் ஐயா கல்யாணத்திற்காகிய முயற்சிகள் செய்கிறார்; ஆனதால் அக்காவின் நோக்கத்தை அப்பருக்கு முந்தியே சொல்லிவிடுவது நல்லது" என்று சுந்தராம்பிகை தன் தாயிடஞ் சொன்னாள். "ஏனும் பிரியமில்லை" என்று ஆவலுடன் தாய் கேட்க, மகள் "என்னைவிட்டுத்தான் என் அருமையான அக்கா இப்பொழுது மணஞ் செய்ய மறுத்து நிற்கிறாள்" என்று சொன்னாள். "அது நியாயந்தானே, அமுதத்திற்கு நீதானே ஒரே ஒரு சகோதரம்; எல்லாக் குழம்பிய நிலையில் நீ இருக்க, அவள் தான் கல்யாணத்திற்குச் சம்மதிப்பாளா? சரி நான் உங்கள் அப்பர் வந்தவுடன் சொல்லித் தடுத்துவிடுகிறேன்; பணத்தை வீணாகச் செலவிடுவது புத்தியல்லவே" என்று மங்களத்தம்மாள் அகத்தில மகிழ்ச்சி கொண்டவளாய்த் தன் புருஷனுடைய வரவை எதிர்பார்த்தபடியிருந்தாள். வெளியிற்சென்றிருந்த முதலியார் சிறிதுநேரஞ் செல்ல வீட்டிற்கு மீண்டுவந்தார்; அவர் வெளியிற் போனதும் தமது மகளுடைய விவாக முயற்சியைவிட்டுத்தான்; முதலியார் வீட்டைநோக்கித் தூரத்திலே வரக்கண்ட மங்களம் தலைவாசலில் அதிக கவலையோடு கூடியவளாக நிற்கக்காணப்பட்டாள்; மனையாள் கவலையுடன் நிற்பதைமுதலியார் கண்டனரேனும் அவள் கவலையை அவர் பொருட்படுத்தாமல் வீட்டினுள்ளே சென்றார். தம்பெண்டாட்டியின் கவலையிலும் மகிழ்ச்சியிலும் முதலியாருக்குச் சிலகாலமாக நம்பிக்கையில்லை.

'வெம்புவாள் விழுவாள் பொய்யே
மேல்விழுந் தழுவாள் பொய்யே
தம்பலந் தின்பே னென்பாள்
"சாகின்றேன்" என்பாள் பொய்யே
அம்பிலுங் கொடிய கண்ணாள்
ஆயிரஞ் சிந்தை யாளை
நம்பின பேய ரெல்லாம்
நாயினுங் கடைய ராவார்"

என்ற பாட்டை முதலியார் இடையிடையே தம் இல்லாள் விஷயத்தில் மனனம் பண்ணிக்கொள்ளுவார். வீட்டினுட் சென்ற முதலியார் அங்கே தம் இளையமகள் சுந்தரமும் துயருடன் நிற்கக்கண்டு, தம்பிள்ளைகட்குந் தாய்க்குமிடையே யாதும் பிணக்கு நேர்ந்ததோ என்ற சந்தேகமுடையவராய், "பிள்ளை, சுந்தரம், இங்கே வா அம்மா, ஏன் முகம் வாடியபடி நிற்கின்றாய்; உன் அம்மாவிற்கு என்ன கவலை" எனப் பரிவுடன் கேட்க, "அம்மா நிற்கிறேன்,ஐயா, துயரமென்னவென்று அம்மாவைத்தான் கேளுங்கள் ஐயா" என்று அதிக துயரத்தோடு மகள் சொன்னாள். இதற்கிடையிற் புருஷன் நிற்குமிடத்திற்கு மனைவி வர, அந்த இடத்தைவிட்டுச் சுந்தரம் தன் தமக்கையிருக்கு மிடத்திற்குப் போய்விட்டாள்.

"நீலி சிந்திய கண்ணீர்"

தன் மனோரதம் இனி விரைவிற் கைகூடு மென்றதனால் அகத்தே மகிழ்ச்சி கொண்டவளாகிய மங்களம், வற்றப்பட்ட சாக்கோடு கப்பலைக் கடலில் மூழ்கக்கொடுத்த செட்டி போலத் தன் நாயகனைக் கண்ட மாத்திரத்தே நீராக் கவலை கொண்டாள்போல் நின்றாள்; அவள் கண்களில் நீர் துளித்தது. தம் பத்தினி கண்கலங்குவதைக் கண்ட முதலியார் பரிவுகூர்ந்து "மங்களம், என்ன நடந்தது? ஏன் கவலைப்படுகிறாய்? பிள்ளைகளுடன் ஏதும் பிணக்கா? அவர்கள் அறியாமையால் ஏதும் பிழை செய்தாலும் தாயாகிய நீயல்லவோ பொறுக்க வேண்டியது; மனம் வருந்தாதே, கவலைப்படாதே, கண்ணீர் விடாதே, உள்ளதைச் சொல்" என்று கேட்டார். "பிள்ளைகளோடு நான் ஏன் பிணங்கப்போகிறேன்; அவர்கள் எனக்கென்ன குற்றஞ் செய்திருக்கிறார்கள்? வேறொன்றுமல்ல, எங்கள் பெரிய தங்கைச்சியையிட்டு எனக்குப் பெருங் கவலையாயிருக்கிறது" என்று கரைந்தாள் மங்களம். "ஏன் பெரிய தங்கைச்சி என்ன பிழைசெய்தாள்; சுந்தரந்தான் தன் சிறுபிள்ளைப் புத்தியினால் ஏதுந் தவறு செய்தாலும் என் மூத்த மகள் மறந்துந் தவறு செய்யாளே..." என்று முதலியார் சொல்லுவதற்கிடையில் மங்களம் "இல்லைப்பாருங்கள்; அமிர்தம் ஒரு பிழையுஞ் செய்யவில்லை; என் பிள்ளையைக் காட்டிலும் எனக்கு அமிர்தத்தின்மேல்தான் அதிகபட்சம்; அந்தப் பிள்ளையின் கல்யாணத்தைப் பார்த்துச் சந்தோஷப்படலாமென்று நானெண்ணிக் கொண்டிருந்தேன்; அதற்கு இப்பொழுது இடையூறு நேர்ந்ததே யென்பதையிட்டுத்தான் சஞ்சலப்படுகிறேன்" எனலும் "என்ன இடையூறு? ஒரு இடையூறுமில்லையே, நடந்ததென்ன" என்று முதலியார் மனப்பதைப்புடன் வினவுதலும், மங்களம் "அப்படியொரு பெரிய இடையூறுமில்லை நீங்கள் பதறவேண்டாம், அமுதம் தனக்கு இப்பொழுது கல்யாணம் வேண்டாமென்று பிடிவாதஞ் செய்கிறாள்" என்ற துயரத்துடன் சொன்னாள். "ஏன் வேண்டாம் என்று சொல்லுகிறாள்? கல்யாணத்திற்காகவேண்டிய ஆயத்தங்களிற் பாதி இதுவரையிற் செய்துவிட்டேனே; இப்பொழுதும் அந்தக் கருமமாகத்தானே போய்வருகிறேன்; என்பிள்ளை ஏன் அப்படிப் பிடிவாதஞ் செய்கிறாள்? அவள் பிடிவாதமுள்ள பிள்ளையல்லவே, உனக்கு ஏதுஞ் சொன்னாளா?" என்று கணவன் கேட்க, மனைவி "எனக்கு ஏதுஞ் சொல்லவில்லை, சுந்தரத்திடந்தான் எல்லாஞ் சொல்லியிருக்கிறாள்" என்றாள்.

"இதற்கு என்னசெய்வது!"

"சுந்தரத்திற்கு என்ன சொன்னாள் என் பிள்ளை" என்று முதலியார் மீளவுங் கேட்க, "சுந்தரத்திற்கென்று நியமித்த மாப்பிள்ளை மறியலிலிருக்க, அவள் கவலைப்பட்டுக்கொண்டிருக்க, இந்தநேரத்தில் தான் கலியாணஞ் செய்வது சரியல்லவென்றும், நீங்கள் இவைகளைப் பற்றிச் சிந்தியாமல் இப்பொழுது கல்யாணவீட்டிற்காகிய முயற்சிகளைச் செய்வது முறையல்லவென்றும், அப்படிச் செய்தால் உலகம் உங்களையுந் தன்னையுங் குற்றஞ் சொல்லுமென்றுஞ் சுந்தரத்திற்குச் சொல்லிப் பெரியதங்கைச்சி கவலைப்பட்டாளாம்; அமுதம் சொல்லும் நியாயமும் சரிதானே" என்று மங்களம் ஒரு குதிப்புரையோடு விஷயத்தைச் சொல்லி முடித்தாள்; முதலியார் சிறிதுநேரம் யோசித்தார். "இப்படியான ஒரு சங்கடம் வரக்கூடுமென்று நான் முந்தியோசித்ததுமுண்டு; என் பிள்ளையோ தன் தாயைப்போல மிகவும் நீதியானவள்; விவேகி, தன் தங்கையின் பொருட்டுத் தன்னுயிரையும் விடத்தக்கவள்; அவள் கவலைப்பட இவள் சகிக்கமாட்டாள்; நான் என் மகளைக் கூப்பிட்டு நேரில் நியாயங் கேட்டாலும் இந்த நியாயத்தையே சொல்லுவாள்; அப்படிச்சொன்னால் நான் அதற்குப் பதில் நியாயஞ் சொல்ல முடியாது; இதற்கு என்ன செய்வேன்" என்று கவலைப்பட்டுப் பெருமூச்சு விட்டார். "ஏன், நீங்கள் அதிகம் யோசித்துக் கவலைப்படுகிறீர்கள், யோசிக்க யோசிக்க மூளை பழுதாய்ப் போமே, உங்கள் மகளை இங்கே கூப்பிட்டு நியாயத்தை நேரிற் கேட்கலாமே" என்று மனையாள் கூற, "மங்களம், எனக்கு மூளையிருந்தாற்றானே அது பழுதாய்ப்போமென்று பயப்படவேண்டும்; எனக்கு மூளையிருந்தால் நான் இரண்டாந் தாரம் கொள்ள நினைப்பேனா? அது கிடக்கட்டும், அமுதத்தை இங்கே வரச்சொல்லு" என்றார். தாய் போய்ச் சொல்ல அமிர்தாம்பிகை தன் பிதாவின்முன் வந்து பணிவுடன் நின்றாள்.

(வரும்)

வியாச்சியங்கள்

பருத்தித்துறைக் கொலை வழக்கு

இறந்தவரின் மருமகன் கூறிய சாக்ஷியம்

(நமது நிருபர்)

6-5-41

பருத்தித்துறை டிஸ்திறிக்கைச் சேர்ந்த தனக்காரக் குறிச்சியிலுள்ள மயிலியத்தனையில் வசிக்கும் (1) ஆறுமுகம் கார்த்திகேசு, (2) சின்னையா செல்லத்துரை, (3) ஆறுமுகம் ஐயாத்துரை, (4) ஆறுமுகம் சின்னத்துரை (5) ஆறுமுகம் சினைட்டி, (6) ஆறுமுகம் நல்லதம்பி, (7) முருகர் சின்னையா, (8) சின்னையா செல்லப்பா, (9) சின்னையா அல்லது சுந்தவனம் ஆகியோர் சென்ற 1940 ம் ஆண்டு மே மாதம் 20-ந் திகதி கத்திகள், பொல்லுகள், முதலிய ஆயுதங்களோடு சட்டவிரோதமான கூட்டம் கூடி அவ்வூர் S. சிங்காரவேலுக்கும் S. இரத்தினவடிவேலுவுக்கும் S. இராசையாவுக்கும் S. செல்லத்தம்பிக்கும் காயமுண்டாக்கும் நோக்கத்தோடும் சின்னத்தம்பிபெண் செல்லம் என்பவரைக் கத்தியால் குத்திக் கொலை செய்ததாயும் அல்லது முதலாம் எதிரி செல்லம் என்பவளைக் கத்தியால் குத்திக் கொலை செய்ததாயும் இரண்டாமெதிரி இச்செய்கைக்கு முதலாம் எதிரிக்கு உதவிபுரிந்ததாயும் குற்றஞ்சாட்டிய வழக்கு யாழ்ப்பாணம் சப்பிறீம்கோட்டில் விசாரணைக் கெடுக்கப்பட்டது.

இவ்வழக்கில் சம்பந்தப்பட்டோரில் அநேகர் ஒரேகுடும்பத்தைச் சேர்ந்தவர்கள் 1-ம் 3-ம் 4-ம் 5-ம் 6-ம் எதிரிகள் சகோதரர்கள். 2-ம் 8-ம் 9-ம் எதிரிகளும் சகோதரர்கள். 7-ம் எதிரி 1-ம் 3-ம் 4-ம் 5-ம் 6-ம் எதிரிகளின் தாய்மாமனும் 2-ம் 8-ம் 9-ம் எதிரிகளின் தகப்பனாரும் முதலாம் எதிரி இறந்த செல்லம் என்பவளின் மகளை விவாகஞ் செய்திருந்தார். இறந்த செல்லம் என்பவளின் மக்களும் மருமகனுமே இவ்வழக்கில் நேரிற்கண்ட சாக்ஷிகள்.

இச்சம்பவம் நடப்பதற்கு முன்னர் முதலாம் எதிரியும் மனைவியாரும் இறந்த செல்லம் என்பவளோடும் அவளுடைய புருஷன் சின்னத்தம்பியோடும் ஒரே வீட்டில் வசித்து வந்தனர். சின்னத்தம்பி கமஞ்செய்பவர். அவர் தான்செய்த புகையிலையை அறுத்துத் தனதுவீட்டிலேயே உணர்த்தி வந்தார். இவர்உணர்த்துமிடத்தில் 7-ம் எதிரியின் புகையிலையையும் போட்டு உணர்த்தவேண்டுமென 1-ம்எதிரி அவரிடம்கேட்டார், அவர் மறுத்தார். ஆகவே, இவர்கள் இருவருக்குமிடையில் வாக்குவாதம் ஏற்பட்டது. இந்த வாக்குவாதத்தில் சின்னத்தம்பியும் மனைவி செல்லம் என்பவளும் மகன் இரத்தினவடிவேலுவுமாகத் தங்கள் வீட்டைவிட்டு முருகுப்பிள்ளை-சிங்காரவேலுவாகிய இன்னொரு மருமகன் வீட்டிற் போயிருந்தனர். பின்னர்ச் சிங்காரவேலு தனது தோட்டத்துக்குப் போகையில் 1-ம் 2-ம் 3-ம் எதிரிகள் சந்தித்து இரத்தின வடிவேலுவையும் மற்றையோரையும் சிங்கார வடிவேலுவின் வீட்டிலிருந்து அனுப்பும்படி கேட்டனர். மேலும் அவர்கள் அவரை அடித்தனர். அவர் தனதுவீட்டிற்குச் சென்று இதனைச் சின்னத்தம்பிக்கும் மற்றையோருக்குமறிவித்தார். சின்னத்தம்பியும் இரத்தினவடிவேலுவும் விதானையார் வீட்டிற்குச் சென்று முறையிட்டனர். சிங்காரவேலுவும் தனக்கு நடந்ததை விதானையாருக்கு அறிவித்தார். சிங்காரவேலு விதானைவீட்டிலிருந்து திரும்பி வந்தபோது மருமகன் செல்லத்தம்பி தன்னை முதலாமெதிரி தோட்டத்திலிருந்து துரத்திவிட்டாரென அறிவித்தான். சிங்காரவேலுவும் மற்றையோரும் கிராமக்கோட்டுக்குப் போனபோது எதிரிகட்கும் இவர்கட்குமிடையே ஒருதகராறு நடைபெற்றது. பின்னர்ச் சிங்காரவேலுவும் இரத்தினவடிவேலுவும் வேறுபேரும் தோட்டத்திற்குச்சென்று புகையிலை எடுத்துவரச் சென்றபோது இரத்தினவடிவேலு தனதுதாயாரையும் தோட்டத்திற்கு வரும்படி அழைத்தான். தாயார் வீட்டைவிட்டு வெளியேவர இரண்டாமெதிரி செல்லம் என்பவளின்தலைமயிரிற் பிடித்திழுத்துப் பிடிக்க முதலாமெதிரி கத்தியாற் குத்தினான். செல்லம் அவ்விடத்திலேயே விழுந்து விட்டாள். எதிரிகள் அவளைவிட்டுச்சென்றுவிட்டனர் இச்சம்பவம் பொலிசாருக்கு அறிவிக்கப்பட்டது. டாக்குத்தர் பிரேதத்தைச் சோதனை செய்தபோது செல்லம் என்பவளுடைய உடம்பில் மூன்று கத்திக் காயங்களையும் வேறுசில காயங்களையும் கண்டதாகக் கூறியிருந்தார். மூன்று கத்திக்காயங்களில் விலாப்புறத்தே காணப்பட்டகாயம் மிகவும் அபாயகரமானதென்று கூறியிருந்தார். இறந்தவள் மிகவும் வயசானவள்:-

இவ்வழக்கில் முருகுப்பிள்ளை சிங்காரவேலு கூறியவற்றின் சாராம்சமாவது.

நான் இறந்தவளுடைய ஒருமகளை விவாகஞ் செய்திருந்தேன். அவள் இப்போ இறந்து விட்டாள். நான் இறந்தவளோடு அவளுடையமக்களோடும் இருக்கவில்லை புறம்பான ஒருவீட்டில் இருந்தேன். இச்சம்பவத்திற்குமூன்றுநாளைக்கு முன்னர்(17-5-40) நான் தோட்டத்துக்குப்போகும்போது இவ்வெதிரிகள் என்னைவழிமறித்து என்வீட்டில் வந்திருந்த இரத்தின வடிவேலுவை வீட்டைவிட்டு அனுப்பும்படி கேட்டனர். முதலாமெதிரியும் இறந்தவளுடைய வீட்டில்தான் இருந்துவந்தான். இறந்தவளுடைய புருஷன் சின்னத்தம்பி தனதுடைய புகையிலையைவீட்டிலேயேஉணர்த்திவந்தார்.முதலாம்எதிரியாரோடுஒருவருடைய புகையிலையையும் மாமனார்வீட்டில் உணர்த்தக் கேட்டதிலிருந்து ஏற்பட்டவாக்குவாதத்தால் சின்னத்தம்பியும் மனைவியும் (இறந்தவள்) இரத்தினவடிவேலுவும் இவரோடு (முதலாம்எதிரியோடு)பகைத்துக்கொண்டு எனவீட்டில் வந்திருக்கலாயினர். அவர்கள் என்வீட்டில் இருக்க வந்தபோதுதான் முன்நடந்த புகையிலை உணர்த்தும் தகராற்றைப்பற்றி எனக்குக் கூறியிருந்தனர். இதன்பின்நான் தோட்டத்திற்குப்போகையில் இரத்தினவடிவேலுவை எனதுவீட்டைவிட்டு அனுப்பும்படி கேட்டனர். நான்அதற்கு மறுத்தேன். அப்போதுமூன்றும் எதிரிஒரு கதிமுருங்கைத்தடியால் எனக்கு அடித்தார். நான் எனக்கேன் அடிக்கிறாயென்றுகேட்டேன். அதற்குஅவர் உனக்கென்ன நடக்குமென்றதைக் கவனித்துக்கொள் என்றுகூறினர். பின்னர் இவர்கள் இரண்டாம் எதிரிவீட்டுப் படலையடிக்குச்சென்று கூட்டமாகக் கூடினர் நான் எனதுதோட்டத்திற்குச் சென்று புகையிலை எடுத்துக்கொண்டு வீட்டுக்குத்திரும்பினேன். அங்கே எனதுமாமன்மாமிமாருக்கு இதைப்பற்றிச் சொன்னேன். எனதுமாமனும் மகனுமாகத் தனக்காரக்குறிச்சி விதானையார் வீட்டிற்கு முறைப்பாடு சொல்வதற்குச் சென்றனர். இவர்கள் தங்கட்கு நடந்தவற்றை முறையிடச் சென்றனர். நான் எனக்குச் செய்தவற்றிற்கு முறையிடச்சென்றேன். நான் மாமன் மாமிக்கு எனக்கு நடந்தவற்றைக் கூறியபோது அவர்களிடம் உங்களாலதான் எனக்கும் இத்தி நேர்ந்ததாகையால் நீங்கள் உங்கள் வீட்டிற்குச் செல்லுங்கள் என்று கூறினேன், பின்னர் விதானையார் வந்து மாமன்மாமியை அவர்களுடைய வீட்டிற்கு அழைத்துக் கொண்டுபோய் விட்டார். இரத்தினவடிவேலு என் வீட்டில் இருந்தான். மறுநாள் இரத்தினவடிவேலுவை எதிரிகள் துரத்தினதாகவும் அறிந்தேன். நானும் இரத்தினவடிவேலுவும் சின்னத்தம்பியுமாகக் கிராமக்கோட்டிற்குப் போனபோது நாங்கள் முன்னும் பின்னுமாகச் சென்றோம் இரத்தினவடிவேலு விதானை வீட்டடியில் விதானைவீட்டிற்குச் சென்று திரும்பிவந்து இன்றுஒருபிராது விடுதலை காரணத்தையால் முறைப்பாடுகொடுக்கமுடியாதென விதானையார் அறிவிப்பதாகக் கூறினான். நாங்கள் வீட்டுக்குத் திரும்பி வந்தோம், அப்போது வழியில் என்னுடைய மகன் செல்லத்தம்பி தன்னை முதலாமெதிரி துரத்தினதாகக் கூறிக்கொண்டுவந்தான். அப்படித்துரத்தியபோது எதிரிகள் சாமி விளைக்கப்போகிறீர்களோவென்று கூறினர். என்று எங்களுக்குச்சொன்னான். பின்னரும்நாங்கள் செல்லத்தம்பியின் முறைப்பாட்டை விதானையார் வீட்டிற்குச் சென்றோம். விதானையாருக்கு முறைப்பாடு கொடுத்ததும் செல்லத்தம்பியை வீட்டிற்கு அனுப்பிவிட்டோம், அங்கிருந்து விதானையோடு பொலிஸ்நிலையஞ்சென்று இரத்தினவடிவேலு தனக்கு நடந்ததையும் நான்எனக்கு நடந்ததையுங்கூறி எனது புகையிலையை வெட்டிக்கொண்டு போக முடியாதிருப்பதையும் கூறினேன். பொலிசாரும் விதானையும் அங்குவந்து எதிரிகள் வீட்டிற்குச்சென்றனர். பின்னர்ப் பொலிசாரும் விதானையும் திரும்பிவந்து எதிரிகள் இனிமேல் தன்பம் செய்யமாட்டார்களென்றும் தாங்கள் அவர்களை எச்சரிக்கை செய்திருப்பதாகவும் கூறினர். நானும்இரத்தினவடிவேலுவும் இராசவும் சரவணமுத்துவும் வேறுசில பிள்ளைகளுமாகத் தோட்டத்துக்குப் புகையிலையெடுக்கச் சென்றோம். அப்போது இரத்தினவடிவேலு தன தாயாரையும் புகையிலையெடுக்கக் கூப்பிட்டான், தாயார் படலையடியில் வந்ததும் முதலாம் இரண்டாமெதிரிகள் அங்குவந்து எங்கேயெடா புகையிலையெடுக்கப் போகிறீர்கள் என்று எங்களைப்பார்த்துக் கேட்டார்கள். நான் என்னுடைய புகையிலையை எடுக்க நீங்கள்யார் கேட்க என்றுகூறி இரத்தினவடிவேலுவையும் மற்றவர்களையும் அழைத்துவரும்படி கூறினேன். அப்போது இரத்தினவடிவேலு புகையிலையை எடுத்தால் என்னடாசெய்வீர்கள் என்றுகேட்டான். இப்படியாக இவர்கள் வாக்குவாதப்பட மற்றைய எதிரிகளும் அங்குவந்துசேர்ந்தனர். அப்போது முதலாமெதிரி அடியடா என்றுசொன்னார். இரண்டாமெதிரி இரத்தினவடிவேலுவுக்கு வெட்டினார். முதலாமெதிரி இராசவுக்குப் பொல்லாலடித்தார். இரத்தினவடிவேலுவின் தாயார் (இறந்தவள்) அந்தநேரத்தில்தான் படலையால் வெளியில் வந்தாள். இரண்டாமெதிரி அவளுடைய மயிரிற் பிடித்து இழுத்தான். முதலாமெதிரி வெட்டினான். நான் அந்தநேரத்தில் தூரத்தில் நின்று பார்த்துக்கொண்டு நின்றேன். முதலாமெதிரி வெட்டினபோது இரண்டாம் எதிரி இவளை உயிருடன் இருக்க விடப்படாது வெட்டடா வென்று சொன்னான். முதலாம் எதிரி இரண்டு மூன்று முறை வெட்டினான். அவள் நிலத்தில் விழுந்து விட்டாள். நான் தூரத்தில் நிற்கும்போது 'வெட்டடா அவனையும்' என்ற சத்தம் கேட்டது. நான் பொலிஸ் நிலையத்தை நோக்கி ஓடினேன். அங்கு இவ் வறிவித்தலைக் கொடுத்தேன்.

அவர்கள் என்னையும் ஒரு காரில் ஏற்றிச் சம்பவம் நடந்த இடத்திற்குக் கொண்டு வந்தனர். பிரேதத்தை இன்னாருடைய பிரேதமென மரண விசாரணையின் போது குறிப்பிட்டுச்சொன்னேன்.

குறுக்கு விசாரணையின்போது சாட்சி முன்னுக்குப் பின் முரண்பாடாகச் சொன்னமையாலும் முதலாம் எதிரிக்கும் இறந்த செல்லம் என்பவளுக்கும் விரோதம் ஒன்றும் இல்லாமையாலும் எதிரி பக்கத்தார் இச்சம்பவம் நடந்த காலத்தொடக்கம் இச் செய்கையைச் சாக்ஷியாகிய முருகுப்பிள்ளை சிங்காரவேலுவே செய்ததாகக் கூறினமையாலும் கிராமத்திலும் அன்று தொடக்கம் இப்படியான ஒரு கதை உண்டாகியிருந்தமையாலும் எதிரி பக்கத்தார் எதிரிகள் இச்செய்கையைச் செய்யவில்லை யென்றும் சாக்ஷியாகிய சிங்காரவேலு செய்ததாகவும் கூறினர்.

பின்னர் முருகுப்பிள்ளை சின்னத்துரை சாக்ஷியம் கூறுகையில், நான் இச் சம்பவத்தன்று வீட்டிற் சாப்பிட்டுக்கொண்டிருந்தபோது "ஐயோ, என் என் பிள்ளையை வெட்டுகிறீர்கள்" என்ற சத்தம் கேட்டு வெளியே வந்தபோது இரண்டாமெதிரி இறந்தவளைத் தலைமயிரிற் பிடிக்க முதலாம் எதிரி இரண்டுமூன்றுமுறை ஒருகத்தியால் வெட்டினானென்றும் பின்னர், எதிரிகள் அவ்விடத்தைவிட்டு ஓடிவிட்டனரென்றும் இறந்தவள் நிலத்தில் விழுந்தாளென்றும் தான் அவ்விடத்திலேயே இருந்துவிட்டதாயும் அநேகர் இச்சம்பவம் நடந்த இடத்திலிருந்து சிறிது தூரத்தே கூட்டமாக நின்று அடிபிடிப் பட்டதாயுங் கூறினர்.

பின்னர் முருகுப்பிள்ளை-சின்னத்துரையின் மனைவியும் இறந்தவளின் மகளுமாகிய மனோன்மணி சாக்ஷியம் கூறுகையில் குறுக்கு விசாரணை தொடங்கிச் சிறிதுநேரத்தின்பின்னர்ச் சாக்ஷிக் கூட்டில் மயக்கமடையவே நீதியரசர் சாட்சியை வெளியே இறக்கி இருத்திவைக்கும்படி கூறினார். பின்னும் அவள் தெளிவடையாதது கண்டு அடுத்த சாட்சியாகிய வல்லி-வயிரவன் கூப்பிடப்பட்டான்.

விசாரணை நடைபெறுகிறது.

யாழ்ப்பாணத்தில் வித்தியா விசாரணைக் குழுவினர்

விசாரணையில் கனம் லோங் கூறியசாக்ஷியம்

யாழ்ப்பாணம், மே, 3

இலங்கையின் கல்விமுறைச் சீர்திருத்தம் பற்றி விசாரணை செய்து அறிவிப்பதற்காக நியமிக்கப்பட்டுள்ள விசேஷ விசாரணைச்சபை இரு தினங்களாக யாழ்ப்பாணத்தில் தனது விசாரணையை நடத்தியது. நேற்று முந்தினம், சென் பட்றிக்ஸ் கல்லூரிப் பிரதமாசிரியர் கனம். டி. எம். லோங், கல்வி மந்திரி தலைமையிற் கூடிய விசாரணைச் சபையின் முன்பாகச் சாக்ஷியங் கூறினர்.

கனம் லோங் தமது சாக்ஷியத்தில் சமயச் சார்பான பாடசாலைகள் மூலம் அளிக்கப்படும் கல்விமுறை துஷ்பிரயோகஞ் செய்யப்படுவதாகக் கூறப்படுங் குறைக்கு விடையளித்தார்.

1. சமயச் சார்பான பாடசாலைகளின் உண்மை நோக்கம், 2. அவைகளைப் பற்றிக் கூறப்படும் முறைகள் 3. இந்த முறைக்கு என்ன ஆக்ஷேபனைகள் எழுப்பப்படலாம் என்ற இம்மூன்று பிரிவுகளை அடிப்படையாகக் கொண்டு கனம் லோங் சாக்ஷியங் கூறினர்.

முதலாவதாக, அவர் இப்போது இருப்பது போல, சமயச் சார்பான பாடசாலைகளிலும் அரசாங்கப் பாடசாலைகளிலும் எவர் விரும்பினாலுஞ் சேர்ந்து கொள்ளலாமென்ற முறையே நீடித்து வரவேண்டுமென்றும் அவைகளுக்கு முழுப்பண உதவியும் அளிக்கப்படவேண்டுமென்றும் வற்புறுத்தினர். சமயச் சார்பான பாடசாலைகளில் அளிக்கப்படும் விசேஷகல்விக்காக அங்கே விரும்பி அனுப்பப்படும் குழந்தைகளுக்கே இந்தப் பாடசாலைகளிற் கல்வி போதிக்கப்படுகின்றதென்றும் கனம் லோங் தெரிவித்தார். கல்வி விஷயத்தில் அரசாங்கத்துக்கே பரிபூரண ஆதிக்கம் இருக்கக்கூடாதென்ற கருத்தும் கல்வி நிபுணர்களனைவரும் சமயச் சார்பான பாடசாலைகளை ஆதரிக்கின்றனரென்றும் அவர் எடுத்துக் காட்டினர்.

சமயச் சார்பான பாடசாலைக் கல்விமுறை துஷ்பிரயோகஞ் செய்யப்படுவதாகக் கூறப்படுங் குறைகளுக்கு அவர் பதிலளிக்கும் போது, இப்பாடசாலைகள் மதமாற்ற வசதி ஸ்தாபனங்கள் என்பது வரையிற் குறைகள் எழ ஆரம்பித்துவிட்டன வென்றும், இது உண்மையில் மேற்படி பாடசாலைகளைப்பற்றி இதுகாறும் கொண்டிருந்த கருத்தையே மாற்றிவிட முயற்சிப்பதாக விருக்கின்றதென்றும் குறிப்பிட்டார். ஏனைய குறைகளுக்கும் அவர் பதில் கூறியிருக்கிறார்

ஈற்றில், அவர் இந்தக் கல்வி முறையை நீட்டிக்கக் கூடாதென்பதற்கு எத்த ஆக்ஷேபனைகள் எழுப்பப்படலாமென்பதைத் தெரிவித்து அவைகளுக்கும் மறுமொழியளித்தார்.

கட்டுடை இளைஞர்தேர்ச்சிச் சங்கம்

நான்காவது ஆண்டு நிறைவு விழா

மேற்படி சங்கத்தின் நடப்பு வருட உத்தியோகஸ்தர் தெரிவுக்கூட்டம் சித்திரைத்திங்கள் 27ம் நாள் சங்கத்தலைவர் திரு. நா. நடராசா அவர்களின் தலைமையில் நடைபெற்றன. அவ்வமையம் பின்வருவோர் நடப்புவருட உத்தியோகத்தராகத் தெரிவு செய்யப்பட்டனர்.

பாதுகாப்பாளர்கள் திருவாளர்கள் C. சுப்பிரமணியம், S. இளையதம்பி J.W. முத்தையா, V. கணபதிப்பிள்ளை, T. தம்பையா.

தலைவர்- திரு- T. நடராசா, உபதலைவர்கள் திரு- A. இராசநாயகம், திரு- S. சிவசம்பு, செயலாளன் திரு- P. இராசையா, உபசெயலாளன் திரு- S. கந்தசாமி, தனாதிகாரி செல்வன் T. பரஞ்சோதி, உபதனாதிகாரி திரு. K. தெட்சணமூர்த்தி, கணக்குப்பரிசோதகர்கள் செல்வர்கள் P. தியாகராசா, S நேசரெத்தினம், ஆங்கிலப்பத்திராதிபர் செல்வன் K T. மூர்த்தி, உபபத்திராதிபர் செல்வன் T. ஞானசுந்தரம், தமிழப்பத்திராதிபர் செல்வன் A. சோமசுந்தரம், உபபத்திராதிபர் V. கந்தையா, Literary Sec. திரு-S. கந்தசுவாமி, முன்றில் காரியதரிசிகள் திரு- T. பாலசுந்தரம், A. நடராசா திருவாசகசபை அங்கத்தவர்கள்-T. ஞானசுந்தரம், V. தியாகராசா, A. சோமசுந்தரம்.

பின் மாலை 7 மணிக்கு யாழ்ப்பாண இந்துச் சட்ட நூலறிஞர் திரு- சுந்தரலிங்கம் M.A.B Sc அவர்கள் தலைமையில் நான்காவது ஆண்டு நிறைவு விழா நடைபெற்றது. அத்தருணம் சீர்காழி கு- ஸ்ரீநிவாசன் அவர்கள் மணிவாசகரும் இறைவனும் என்னும் பொருள்பற்றியும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துத் தென்னிந்தியவரலாற்று விரிவுரையாளர் திரு ச. க. கோவிந்தசாமிப்பிள்ளை M.A. அவர்கள் பண்டைத்தமிழர் நாகரிகமும் அதன் படிப்பினையும் என்னும் பொருள் பற்றியும் பேசினர்.

திரு- சுந்தரலிங்கம் அவர்களாலேயே பரிசில்கள் வழங்கப்பட்டன. கழகம் இரு குழுவினராகப்பிரிக்கப்பட்டே கல்வி சம்பந்தமாகவும் விளையாட்டுச்சம்பந்தமாகவும்போட்டிகள் நடாத்தியதில் சபாபதிக்குழுவினரே கேடயம்பெற்றனர்.

வேலணைச் சைவப்பிரகாச வித்தியாசாலைப் பழையமாணவர் சங்கம்

விஷு- சித்திரை ஒன்பதாம் நாள் (21-4-41) திங்கட்கிழமை மாலை 7 மணியளவில் வேலணைச் சைவப்பிரகாச வித்தியாசாலையின் ஆக்கங்கருதி உழைப்பதற்கு ஓர் பழைய மாணவர் சங்கத்தினை நிறுவும் நோக்கமாகக் கூட்டப்பட்ட பொதுக்கூட்டம் மேற்படி வித்தியாசாலைமண்டபத்தில் திரு. வே. சுப்பிரமணியம் அவர்களைத் தலைவராகவும், திரு. நா. சரவணமுத்து அவர்களைக் காரியதரிசியாகவுங் கொண்டு தேவார பாராயணத்துடன் ஆரம்பமாயது.

தலைவர் அவர்கள் தமது முன்னுரையில் தீவுப்பகுதிகளுட் பழைமையான சைவத் தமிழ்ப் பாடசாலை மேற்படி வித்தியாசாலை என்றும், அதற்குத் தகுதி வாய்ந்த ஆயிரக்கணக்கான பழைய மாணவர்களுண்டென்றும், அவர்களெல்லோரையும் ஒருங்கு கூட்டி ஓர் பழைய மாணவர் சங்கத்தினை யமைத்துப் பாடசாலையின் முன்னேற்றத்துக்காக உழைப்பது தக்கதென்றுங் குறிப்பிட்டார்.

அதன்பின்னர்த்திரு. நா. சரவணமுத்து, ஆசிரியர் திரு. நா. கந்தையா, ஆசிரியர் திரு. நா. நடராசா, திரு ச. நாகேந்திரம்பிள்ளை, ஆசிரியர் திரு. செ கனகசபாபதிப்பிள்ளை தலைவரின் குறிப்பை ஆதரித்துப் பழையமாணவர் சங்கத்தின் இன்றியமையாமையை எடுத்துச் சபைக்கு விளக்கினார்கள். ஆசிரியர் திரு. நா. நடராசா தமது குறிப்பில் தீவுப்பகுதிகளுள் மிகவும் பழைமையான பாடசாலை யாழ்ப்பாண நாட்டில் சைவம் வளர்த்த, தமிழ் வளர்த்த நாவலர் பெருமானின் அடிச்சுவட்டைப் பின்பற்றி ஆக்கப்பட்ட பாடசாலை பல ஆயிரக்கணக்கான பழைய மாணவர்களையுடைய பாடசாலை இராச்சிய மந்திர சபைத்தலைவர் சேர். வை. துரைசுவாமி முதலிய பல பெரியார்களைப் பழைய மாணவர்களாகவுடைய தனிப் பெருமையைத் தன் மாட்டுடைய பாடசாலை இந்த வேலணைச் சைவப்பிரகாச வித்தியாசாலையே யாகுமெனவுங் குறிப்பிட்டார்.

அதன்பின்னர்ப் பென்சனர் (F.M.S) திரு. ச. வேலுப்பிள்ளையவர்களால் மேற்படி வித்தியாசாலையின் ஆக்கங்கருதி உழைப்பதற்கு ஓர் பழைய மாணவர் சங்கத்தினை நிறுவுதல் வேண்டுமெனக் கொண்டுவரப்பட்ட பிரேரணை திரு. த. பொன்னம்பலம் அவர்களால் அனுமதிக்க ஏகமனதாக நிறைவேறியது; கீழ்வருபவர்கள் சபையின் உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர்கள்:— சேர். வை. துரைசுவாமி ஸ்ரீமத் ம. தம்பு உபாத்தியாயர்.

தலைவர்:— திரு. வே. சுப்பிரமணியம் பென்சனர் பள்ளம்புலம்.

உபதலைவர்:— திரு. மு. மயில்வாகனம் யாழ். இந்துக்கல்லூரி.

இணைக்காரியதரிசிகள்:— திரு. நா சரவணமுத்து P. M. வேலணை திரு. நா. நடராசா ஆசிரியர் சைவப்பிரகாச வித்தியாசாலை.

தனதிகாரி:— திரு. மு. சின்னையா, வர்த்தகர் யாழ்ப்பாணம்.

திருவாசகசபை உறுப்பினர்கள்:- திருவாளர்கள் செ. கனகசபாபதிப்பிள்ளை, நா. ஆறுமுகம், ம. கணபதிப்பிள்ளை, ச. மகாலிங்கம், சு. கோபாலபிள்ளை, த. தில்லைநாதர், வை. பாலசிங்கம், ச. சரவணமுத்து. நா. நமசிவாயம், இ. சிவசிதம்பரம், ச. தாமோதரம்பிள்ளை, அ. பொன்னுத்துரை, ச.வேலுப்பிள்ளை, தி. நாகலிங்கம், நா. சுந்தரம், ஆ சபாபதிப்பிள்ளை, பொ. நா. நடராசா.

பிறநாட்டுக் காரியதரிசிகள்:-

யாழ்ப்பாணம் திரு. மு. குமாரசுவாமிப்பிள்ளை கொழும்பு திரு.செ. க. சண்முகம்பிள்ளை கண்டி திரு கா. க. பசுபதிப்பிள்ளை அம்பலாங்கொடை திரு' இ. ச. இராசையா காலி திரு. வை. க. பொன்னம்பலம்.

தொண்டர்படையுறுப்பினர்:-

திரு. த. சிவஞான சம்பந்தன் திரு. பொ. திருநாவுக்கரசு.

ஈற்றில் தேவாரபாராயணத்துடன் கூட்டம் இனிது நிறைவெய்தியது.

தி மலாயன்
டிரேடிங் கொம்பனி
(சிங்கப்பூர்க் கொம்பனி)
இரும்பு, பித்தளைச்சாமான்
கள்சீமேந்து வகைகள்
விற்பனவு செய்வோர்
பெரியகடை, யாழ்ப்பாணம்
"புரொப்ரைட்டர்"
K. A. இரத்தினசிங்கம்
Y150,—3-4-40 3-3-4.

சீதாரியில் வீடுடைத்துத் திருட்டு

1-ம் எதிரிக்கு 9 மாதம்; 2-ம் எதிரிக்கு 1 மாதம்

(நமது நிருபர்)

7-5-41

காலியில் வசிக்கும் ஜெயக்கொடிகே ஜெம்பியஸ் என்னும் சிங்கள வாலிபனும் தற்போது சிலனகடையில் வசிப்பவனும் தோட்டம் பழ வியாபாரியும் இந்திய வாசியுமாகிய செபமாலை-பொன்னையா வென்பவனுமாகச் சீதாரியிலுள்ள பசங்கேசரல் வீதியிலுள்ள திரு. ஐயாக்-பொன்னம்பலத்தின் 55-ம் இலக்க வீட்டை உடைத்துச் சொந்தக்காரரில்லாத நேரத்தில் 800 ரூபா பெறுமதியான அணிகலன்களையும் வேறு பொருட்களையும் களவாடினதாகக் குற்றஞ் சாட்டப்பட்ட வழக்கில் எதிரிகள் குற்றத்தை ஒப்புக்கொண்டிருந்தனர். இன்று முதலாம் எதிரி இதற்கு முன்னரும் இருமுறை குற்றப்பட்டதை ஒத்துக் கொண்டான். இரண்டாமெதிரி முன்னர் குற்றப்பட்டிருக்கவில்லை. நீதிபதி திரு. குவிண்டன் பேர்னுண்டோ தீர்ப்புக்கூறுவதற்கு முன்னர் இவ்வழக்கைக் கொண்டு நடத்திய யாழ்ப்பாணம் உதவிச் சுப்பிரிண்டென்டன் திரு. J. G.De லெயிசா இக்களவை முதற் காரணனாக நின்று கொண்டு நடத்தியவன் ஒரு பொலிஸ்காரனே. இவர்கள் அவனுடைய ஏவுதலைக் கொண்டு செய்தவர்களே. இக் களவு சம்பந்தமாக அப்பொலிஸ்காரன் மீது வழக்குத் தொடர்ந்து அவனைக் கோட்டிற்குக் கொண்டு வருவதற்கு எங்கட்குப் போதிய சாக்ஷியம் இல்லாதிருந்தது. இருந்தும் அவன் இது சம்பந்தமாக உத்தியோகத்தினின்றும் விலக்கப்பட்டிருக்கிறான் என்று இந்தச் செய்தியையும் நான் நீதிபதிக்குத் தெரியப்படுத்துகிறேன். மேலும் களவுபோன சாமான்களில் 60 அல்லது 70 பெறுமதியான அணி வகைகள் மற்றவைகள் கைப்பற்றப்பட்டன என்று கூறினர். நீதிபதி முதலாம் எதிரிக்கு ஒன்பது மாதக் கடூழியச் சிறைத்தண்டனையும் இரண்டாமெதிரி முன்னர்க் குற்றப்படாமையால் தண்டனையைக் குறைத்து ஒரு மாதக் கடூழியச் சிறைத்தண்டனையும் விதித்தார்.

கள்ளச் சாராயம் கண்டு பிடிக்கப் பட்டது

எதிரிக்குக் கட்டளைவிட உத்தரவு

6-5-41

முன்னறிவித்தலைக் கொண்டு பருத்தித்துறை மதுபரிபாலனக் கந்தோரைச் சேர்ந்த K. R L. De. சில்வாவும் வல்லுவெட்டித் துறைக் கந்தோரைச் சேர்ந்த L. அமரசிங்கியும் I. S. அருளம்பலமும் பொலிஸ் பகுதியாருமாக உரும்பராயில் வசிக்கும் வேலுப்பிள்ளை சின்னத்துரை என்பவருடைய வீட்டைப் பரிசோதித்தபோது, ஒரு கலன் பதினைந்தே முக்கால் திருட்டு வடி சாராயத்தையும் எழுபது கலன் கோடாவையும் (சாராயம் வடித்தெடுக்கக் கூடிய கலவை வஸ்து) சாராயம் வடிக்கும் கருவிகளையும் சென்ற மே மீ 2-ந் திகதி பகல் மூன்று மணியளவிற் கண்டெடுத்தனர். இவற்றை அளிநாவது கோடா நிறைந்த பெரிய பானைகளையும் போத்தல்களையும் இன்று யாழ்ப்பாணம் நீதிபதி மிஸ்டர். குவிண்டன் பேர்னுண்டோ முன்னிலையிற்சமர்ப்பித்து உரும்பராய் வாசிகளாகிய 1 வேலுப்பிள்ளை - சின்னத்துரைக்கும் 2 செல்வரெத்தினம் பெண் இராஜலெக்ஷுமிக்கும் 3 நடராசா பெண் சரஸ்வதிக்கும் 4 தங்கேஸ்வரிக்கும் கட்டளைவிட உத்தரவு கோரினர். நீதிபதி கட்டளை விடுவதற்கு உத்தரவளித்தார். கட்டளை வருகிற 9-5-41-ந் திகதிக்குக் கோட்டிற் சமூகம் அளிக்கும்படி மேற்கூறியவர்கட்கு விடப்பட்டிருக்கிறது.

கள்ளக் கஞ்சா வைத்திருந்தோருக்கு அபராதம்

6-5-41

வல்லுவெட்டித் துறையைச் சேர்ந்த மதுப்பரிசோதகர் வல்லுவெட்டித் துறையில் வசிக்கும் வடிவேலு இராமசாமி பெண் இலக்ஷுமிப்பிள்ளை இருபத்துமூன்று இறுத்தல் கஞ்சாவைச் சட்டவிரோதமாக வைத்திருந்ததாகக் குற்றஞ்சாட்டி ஒரு வழக்கைப் பருத்தித்துறைக் கோட்டில் தொடர்ந்தபோது, எதிரி குற்றத்தை ஒப்புக் கொள்ளவே, நீதிபதி எதிரிக்கு ரூபா 275 அபராதம் விதித்தார்.

முத்திரைச் சந்தையடியில் மலகூடம் அமைக்கத் தீர்மானம் நிறைவேறிற்று

எப்பிரல் 28ந் திகதி திங்கட்கிழமை நடைபெற்ற பட்டினசபைக் கூட்டத்தில் முன்னரே கொடுக்கப்பட்டிருந்த பிரேரணை அறிக்கைப்படி திரு V.S. இராமநாதன் பின்வருந் தீர்மானத்தைப் பிரேரித்தார்.

பொதுஜனச் சுகாதாரத்தையொட்டி முத்திரைச்சந்தையில் அல்லது அச்சந்தைக்கு அருகாமையில் ஒருபொதுஜன மலகூடத்தை அமைக்க வேண்டும்.

இப்பிரேரணையைத் திரு C. பொன்னம்பலம் ஆமோதித்தார்.

இப்பிரேரணை அங்கீகரிக்கப்பட்டு குறித்த மலகூடத்தை அமைப்பதற்குத் தகுதியான இடத்தை ஜனங்களுக்கு ஆக்ஷேபகரமல்லாத பகுதியில் தெரிந்து தலைவருக்கு அறிக்கை செய்யும்படி திருவாளர்கள் இராமநாதன், பொன்னம்பலம் ஆகிய இருவரிடமும் விடப்பட்டது.

விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறையில்நடைபெறும் யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்

தும்பளை சோமசுந்தர ஐயர் சபாபதி ஐயர் மறுநாமம் வைத்தியநாத சாஸ்திரிகள் ஓர் குணபேதகாரன், அவரின் பராபரிப்புக்காரன் தும்பளை சபாபதி ஐயர் சோமசுந்தர ஐயர் வழக்காளி.

இல.756/P

எதிராக

1. புலோலி கிழக்கு சுப்பா கணபதிப் பிள்ளையும்
2. பெண்ஆள்வாத்தையும் எதிரிகள்.

மேற்கூறிய இலக்கவழக்கில்லனக்குக் கோட்டால் அனுப்பப்பட்ட கொம்மிஷன் அதிகாரப்படி 1941ம்ஆ வைகாசிமீ 31ந்உ சனிக்கிழமை பிற்பகல் 2 மணி தொடக்கம் இதன்கீழ்க் காணப்படும் அட்டவணையில் விபரிக்கப்பட்டிக்கும் ஆதனங்கள் அவ்வாதனத்தினிடமாகவிருந்து பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

அட்டவணை

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் வடமராட்சிப் பகுதி பருத்தித்துறைக் கோயிற்பற்று

1. புலோலிகிழக்குசிங்கபாகுதேவன் குறிச்சிவிறை மாரக்காய் நிலப்பரப்பு 7½. பனைகளும், எல்லை கிழக்கு ஆழ்வார் பெண் வள்ளிப்பிள்ளைக்கும் மறுபேருக்குமுரிய வாதனம், வடக்கும் தெற்கும் ஒழுங்கை, மேற்கு ஒழுங்கையும், கணபதியார் வேலப்பனுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனமும், இவ்வெல்லைக்குட்பட்டவைகளில் சொரியலாய் $\frac{1}{16}$ பங்கும். Regd: A $\frac{2}{84}$.

2. ஷெயிலுறை மாக்கணம்பற்றை நிலப்பரப்பு 13¾ ஷெ விடு 1, ஷெ விடு 1 இவைகளில் வடக்குப் புறமாக ½ பங்கு நிலத்துக்கு நிலப்பரப்பு 5 குளி 8½ பனைகள் வடலிகள் வேம்புகள் கிணறும், எல்லை கிழக்கும் வடக்கும் மேற்கும் ஒழுங்கை, தெற்கு வேலப்பர் பெண் சிதேவனுக்கும் மறுபேருக்குமுரிய வாதனம். இவ்வெல்லைக்குள் நிலம் பனைகள் வடலிகள் வேம்புகளிற் சொரியலாய் ¼ பங்கும், கிணற்றில் சொரியலாய் $1\frac{1}{2}$ பங்கும் Regd. [illegible]

3. புலோலி மேற்கு சிங்கபாகுதேவன் குறிச்சிவிறை குரும்பசிட்டி நிலப்பரப்பு 24¾. பனைகள் வடலிகளும், எல்லை கிழக்கு வல்லிபுரம் பெண் தெய்வானைக்கும் மறுபேருக்குமுரிய வாதனம், வடக்கு சின்னையா பெண் இலட்சுமிப்பிள்ளைக்கும் மறுபேருக்குமுரியவாதனம். மேற்கு ஒழுங்கை, தெற்கு கந்தையா பெண் தங்கத்துக்குரிய ஆதனமும், குமாரசாமி கிருஷ்ணபிள்ளைக்கும் மறுபேருக்குமுரிய வாதனமும், இவ்வெல்லைக்குள் பனைகள் வடலிகளில் பதிரிப்பங்கு ¼ மிறங்கலாக மிகுதிப்பனைகள் வடலிகளிலும் நிலத்திலும் சொரியலாய் ⅛ பங்கும். Regd. A $\frac{153}{81}$.

மா. வேலுப்பிள்ளை,
கொம்மிஷனர்.

புலோலி கிழக்கு,
பருத்தித்துறை
1941ம்ஆ சித்திரைமீ 24ந்உ.
Mis 29 8- 5. 41

இரு குழந்தைகளின் பரிதாப முடிவு

கழுத்தறுபட்ட நிலையில் இரத்த வெள்ளத்திற் கிடந்த காட்சி

தந்தையின் பிரேதம் தூங்கிக் கொண்டிருந்தது

கண்டி மே 4

கடுகன்னாவையிலுள்ள அலகல்லைத் தோட்டத்தைச்சேர்ந்த தொழிலாளர் வாசஸ்தலப் பகுதியில் (லயின்) ஒரு வீட்டில் 4-ம் 6-ம் வயதுள்ள இரு தாயில்லாக் குழந்தைகள் கழுத்திற் கத்தியால் வெட்டப்பட்டு இரத்த வெள்ளத்தில் மாண்டு கிடக்கவும் இந்த இரண்டு பிரேதங்களுக்கும் மேலே அவர்களின் தகப்பனாகிய ஜோசெப் என்னுந் தொழிலாளி உத்தரத்தில் தூக்குப் போட்டுத் தூங்கிக் கொண்டிருக்கவுங் காணப்பட்டனர்.

ஜோசெப் ஒரு மலையாளி. தாயாரையிழந்த இரண்டு ஆண் குழந்தைகளுடனும் அவர் தோட்டத்திலுள்ள தொழிலாளர் வாசஸ்தலப் பகுதியில் வசித்து வந்தார். அவர் பெரிய முன் கோபக்காரரென்றும் திடீரென வந்த முன் கோபத்தில் அவர் தன் குழந்தைகளைக் கொன்று தானே தனக்குத் தூக்கிட்டிறந்திருக்க வேண்டுமென்றும் சொல்லப்படுகிறது.

கண்டி அடிஷனல் டிஸ்திறிக் நீதிபதி ஸ்தலத்துக்குச் சென்று விசாரணை நடத்தித் தற்கொலை என்றும் கைமோசக் கொலை என்றும் இரு தீர்ப்புகள் கூறினர்.

சண்டையைத் தீர்த்த நாய்

கந்தர்மடம் புகையிரதப்பாதைச் சந்திக்கு வடக்காமையில்(1-5-41)ஒரு வயோதிபர் வரும் போது குடி வெறியுடைய இரு வாலிபர் அவ்வயோதிபரைத் தாக்கினர்களென்றும் அண்மையில் நின்ற ஒரு நாய் அடித்த வாலிபரில் ஒருவரைக் கடித்து அவ்வயோதிபரை மேலும் தாக்காதபடி காத்துவிட்டதெனவும் அறிகின்றோம்.

சைவப் பிரசங்கங்கள்

உடுவில் சிவஸ்ரீ ஐ. முத்துச்சாமிக் குருக்கள் விஷு- வருஷம் சித்திரைமாசம் 19ந் திகதி வியாழக்கிழமை 'கொடியேற்றத் திருவிழா' என்னும் பொருள்பற்றி புளாய்ப் பிள்ளையார் கோவிலிலும், 20ந் திகதி வெள்ளிக்கிழமை 'சண்டேசுரநாயனர்' என்னும் பொருள் பற்றிப் புளியங்கூடல் கதிர்வேலாயுதசாமி கோவிலிலும், 21ந் திகதி சனிக்கிழமை 'சிவாகமமும் மகோற்சவபேதங்களும்' என்னும் பொருள் பற்றித் திருநெல்வேலி வாலையம்மன் கோவிலிலும் விரிவுரைகள் நிகழ்த்தினர்கள். கடித.

5000 சிஷ்யர்களைக் காங்கிரஸிற் சேர்க்க உறுதி

கராச்சி மேமீ

ஸிந்துவில் மிக்கசெல்வாக்குடையவரும் 10 லக்ஷம் பேர்களைச் சிஷ்யர்களாகக் கொண்டவருமான பீர்பகாரோ என்னும் முஸ்லிம்மத குரு ஒருவர் அண்மையில் பிரதிநிதிசபை அங்கத்தவரான லாலா மேக்ராஜ் என்பவருக்குப் பேட்டியளித்தபோது தம்முடைய சிஷ்யரில் 5000 பேர்களுக்கு மேலானவர்களைக் காங்கிரஸிற் சேர்த்துவிட உறுதி கூறியதாகத் தெரிகிறது.

நாரந்தனைக் கந்தசுவாமி கோவில்

திருப்பணி விஞ்ஞாபனம்

அன்பர்காள்,

இக்கோவிலை முன் பரிபாலனஞ் செய்துவந்தவர்கள் பிரமாதி வருஷம் மாசிமீ 12-ந் திகதி (24.2.40) தொடக்கம் ஊரவர்களின் பரிபாலனத்தில் சாதனம் மூலம் ஒப்படைத்தனர். அக்காலந் தொடக்கம் ஊரவர்கள் பஞ்சாயம் நியமித்து கோவிலை நடத்தி வருகின்றார்கள். விக்கிரம வருஷம் பங்குனி மீ 1-ந் திகதி சம்புரோக்ஷண கும்பாபிஷேகம் இக் கோவிலில் சிறப்பாக நடத்தப்பட்டது. கோவில் மிகவும் சிதைந்திருக்கின்றது, திருப்பணியைப் புதுப்பித்தல் அவசியமெனத் தீர்மானித்து வேலையை ஆரம்பித்திருக்கின்றோம். பெருந்தொகை நிதி தேவையிருக்கின்றது. அன்பர்களைத் தங்களாலியன்ற பொருளுதவி புரியும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

திரு. க. சிவலிங்கம் காரியஸ்தர், நாரந்தனைக் கந்தசுவாமிகோவில், ஊர்காவற்றுறை என்ற விலாசத்துக்கு அன்பர்கள் தங்கள் பணத்தை யனுப்பி வைக்கலாம்.

விஷு- வருஷ சித்திரைமீ
11-ந் திகதி
ஊர்காவற்றுறை

இங்ஙனம்
க. சிவலிங்கம் (காரியஸ்தர்)
வே. மு. வேலுப்பிள்ளை
க. அம்பிகாபதி
வ. சோமசுந்தரம்பிள்ளை
க. அருணம்பலம்
பஞ்சாய அங்கத்தவர்கள்.

Mis 28 8 11- 5- 41

ஹிற்லரின்பேச்சு

"பகைவர் ஆயுதபலத்தால் எங்களை வெல்ல இடங் கொடுக்கமாட்டோம்"

"இந்த ஆண்டு ஒரு விசேஷமான ஆண்டாகும்"

சிலகாலமாக மௌனஞ் சாதித்த ஹெர்ஹிட்லர் இந்த மே மீ 3-ந் தேதி மாலை தம் சனங்களுக்குச் சில கூறியுள்ளார். அவருடைய பேச்சு முழுவதும் தற்புகழ்ச்சியென்றே பல ஆங்கில பத்திரிகைகள் வாதிக்கின்றன. ஒரு நாட்டில் யுத்தம் முடிந்து தமக்கு அநுகூலம் வந்த பின் ஒரு முறை பேசுவது ஹிட்லரின் வழக்கம். இப்பொழுது யூகோஸ்லேவியா கிறீஸ் என்னு மிருநாடுகளிலும் தமக்கு யுத்தம் அநுகூலமாக முடிவுற்றமையினால் ஹிட்லர் ஆரவாரஞ் செய்கின்றாரென்று நப்பவேண்டியிருக்கிறது. அவர்பேசியவற்றின் சுருக்கம்:-

"எதனையுஞ் செய்கையிற் காட்டி வைக்க வேண்டிய இந்த நேரத்தில் வாய்ப்பேச்சினுல் சுகமுண்டாகாது. போலன்டு யுத்தம் முடிந்தவுடன் நான் முதன் முதல் உங்களுக்குப் பிரசங்கஞ் செய்தனன். அந்த நேரத்தில் யுத்தத்தை விடுத்துச் சமாதானத்தை ஆக்கிக் கொள்வதற்காக நான் பெரிதும் முயற்சி செய்தேன்; ஆனுல் பிரான்ஸியரும் பிருத்தானியரும் அதற்கு மாறுக நின்று பின்னரும் போரை மூட்டிச் சமாதானத்தைக் கெடுத்து விட்டார்கள். பிருத்தானியருடன் சமாதானம் பூண்டு ஒத்துழைக்கலாமென முயற்சி செய்தேன்; ஆனுல் அவர்களுள் ஒரு கட்சியார் என்னுடைக்கத்திற்கு இடங் கொடாமற் சண்டையே வேணுமென்று நின்றார்கள்; என்ன நஷ்டம் வந்தாலும் சேதம் நேர்ந்தாலும் ஜர்மனியருடன் போர் செய்தே தீரவேண்டுமென்று சேர்ஜிலும் அவர் கட்சியாரும் பிடிவாதஞ் செய்தார்கள். அமெரிக்கரும் அதற்கு உடன்பாடாய் நிற்கின்றனர். ஜர்மனியராகிய எங்களை 1918-ம் ஆண்டின் நிலைமைக்கு இன்னுமொருமுறை இறக்கிவிடலாமெனப் பகைவர் நினைக்கின்றனர்; ஆனுல் அது ஒரு போதும் நிகழப் போவதில்லை.

பகைவருடைய படைவலி எங்களை ஒருபோதும் பின்விடச் செய்யப் போவதில்லை; ஜர்மனிய போர் வீரர்களாகிய உங்களுக்கு இன்னமும் அதிகமான ஆயுத வலியை உதவ நினைத்திருக்கிறேன். இனி நடக்கவிருக்கும் முயற்சிகளை மிக்க ஆவலோடும் நம்பிக்கையோடும் எதிர் பார்த்திருக்கிறேன்.

நாங்கள் நினைத்ததை அநுகூலமடைந்து வருவதையிட்டு நான் எல்லாம் வல்ல இறைவனை வந்திக்கின்றேன். இனியும் எங்களைக் கைவிடாது காக்கும் வண்ணம் இறைவனை வேண்டிக் கொள்ளுகிறேன். ஜர்மனியரின் படைவலியும் எங்கள் துணையரசுகளின் படைவலியும் சேர்ந்திருக்கும்போது உலகத்திலே வேறு எந்தப் படைவலியும் ஈடாக நிற்கமாட்டாது.

சென்ற 1939-ம் ஆண்டு செப்டெம்பர் மாசத்திலும் பின் அக்டோபர் மாசத்திலும் பிருத்தானியரிடத்தாவது பிரான்ஸியரிடத்தாவது எதும் நாங்கள் பெறவிரும்பவில்லையென்றும், வீணுக யுத்தத்தைத் தொடர்ந்து நடத்துவது நல்லதல்ல வென்றும் சமாதானம் பேசிப் பார்த்தேன். ஆனுல் பிருத்தானியருட் சண்டைப் பிரியரும் அவர்களுக்கு முற்பண முதலியோருங் கூட நோக்கு இசையவில்லை. அப்படியேனுஞ் சமாதானஞ் செய்வதானுல் ஜர்மனியராகிய எங்களைப் பழையபடி நசித்துத் தங்கள் அடிக்கீழ் கோடிநேரமும் எங்களை உணவிரக்கலைக்க வேண்டுமென்று பகைவர் நினைத்து விட்டார்கள். அந்தச் சமையத்திற்றன் மின்ஸ்டர் சேர்ஜிலின் புத்தி கேட்டு நார்வே அரசினர் எங்களுடன் மாறுபடவும் அவர்களுக்கு இடங் கொடுக்கவுந் தலைப்பட்டனர்; நார்வேயில் அபயமடைந்தமையைக் கண்டு பிருத்தானியர் பெல்ஜிய ஹொலாந்து அரசினரைத் தங்களுக்கு இடந்தரும்படி நெருக்கி நின்றனர்; றைன் நதிரம் வரையிற் படையெடுத்து வந்து எமகள் ஆணைச் சிதைக்கலாமென்பதே பிருத்தானியரின் நோக்கமாக விருந்தது. சென்ற ஆண்டு மேமாசத்தில் பகைவருடைய யுத்த முனைகளையெல்லாம் சிதைத்து முன் எக்காலத்திலுமில்லாத வெற்றியை அடைந்தோம். பின் ஜூலாய்-மாசத்திலும் உலக சமாதானத்தை விரும்பிப் பகைவருடன் சமாதானம் பேசினேன்; அப்பொழுதும் அவர்கள் இடந்தரவில்லை."

ஹிட்லர் பின்னர் அமெரிக்கருக்கும் கிரேக்கருக்கும் பிருத்தானியர் கூறிய வாக்கைப் பற்றியும் அதனுல் அவ்விருநாட்டினரும் பின்பு அடைந்த அதோ கதியைப் பற்றியும் விபரமாகப் பேசினராம்.

"கிரேக்கநாட்டுச் சனங்களைப் பற்றிச் சொல்லுமிடத்து அந்நாட்டுச் சாமானிய சனங்களின் கொள்கை வேறு, அந்நாட்டின் அரசினர் கொள்கை வேறென்று சொல்லலாம், அந்நாட்டு அதிகாரிகள் பிருத்தானியருடைய தூண்டுதலிலேயே ஜர்மனியரைப் பகைத்துத் தம்மையும் தம் சனங்களையும் இடருக்குள்ளாக்கினர்; ஆனாலும் கிரேக்க போர் வீரர்கள் தம் தாய் நாட்டைக் காக்கும்படி செய்த போரை நான் பாராட்டாமலிருக்க முடியாது. இனி, கிரேக்கர் விஷயத்தில் நான் அவர்களுக்கு மாறுகப் படையெடுத்துச் செல்லவில்லை; முஸோலினி என்னைத் தனக்குத் துணை செய்ய வரும்படி கேட்கவுமில்லை; பிருத்தானியரைக் கிரேக்கநாட்டிலே பெலப்பட விடுத்தால் பால்கன் யுத்தத்தில் அவர்களால் என்னுடைக்கத்திற்கு இடையூறு நேரக்கூடுமென்றெண்ணிப் பிருத்தானியருக்கு மாறுகவே நான் ஜர்மனிய படையை அங்கே அனுப்பினேன்.

இனி யூகோஸ்லேவியாவைப் பற்றிக் கூறுமிடில், முதல் அவர்கள் எங்களுடன் உடம்படிக்கை செய்ததையிட்டு நான் மனமகிழ்ச்சியடைந்திருந்தேன்; ஆனுற் பிறகு அவர்கள் அந்த உடம்படிக்கைக்கு நேர் விரோதமாகக் கருமஞ் செய்யத் தலைப்பட்டார்கள். அப்படி மாறுபட்டவுடனே அவர்களைத் தாக்கும்படி என் சைனியத்திற்குக் கட்டளை செய்தேன். ஜர்மனியருடன் உடம்படிக்கை செய்து விட்டுப் பின்னர் எவரும் மாறுபட முடியாதென்பதை இப்பொழுது அவர்களுக்குக் காட்டி வைத்தேன்" என்று கூறி ஹிட்லர் பின்னரும் இந்த யுத்தத்தில், பகைவர் சொல்லுகிற அளவிற்கு உயிர்ச்சேதமேனும்பொருட்சேதமேனும் இல்லையென்றும் நாம் செய்யும் இந்த யுத்தத்தின் பயன் இப்போவதோடு முடிந்துபோவதில்லையென்றும் இன்னும் ஆயிரம் வருடத்திற்கு நின்றுபிடிக்கு மென்று கூறிமுடித்தார்.

சின்னம்மை நோய்த் தடைஏற்பாடு

கொழும்பு வடபாதி தொற்று நோய்ப்பகுதிஎன்ற பிரகடனம்

1,000 பேருக்குப் பால் குத்தப்பட்டது

கொழும்புநகரின்வடபாதி தொற்று நோய்ப்பகுதியென்று பிரகடனம் செய்யப்பட்டிருக்கிறது. இப்பகுதியிலுள்ள ஒவ்வொருவருக்கும் வலோற்காரமாகவேனும் தவறாமல் அம்மைப்பால் குத்தப்படும்.

கொள்ளுப்பிட்டிப் புகையிரத நிலையத்தெரு டரெட் ரேட்டு வாட்டர்லோ கோட்டாறேட் ஆகியவற்றுக்கு வடக்கேயுள்ளபகுதிதான் தொற்று நோய்ப் பகுதியென்று உத்தியோக சம்பந்தமான அறிக்கை யொன்று கூறுகின்றது.

கொழும்புப் பிரதம வைத்திய சுகாதார அதிகாரி டக்டர் வி. எச். குலசேகரத்தை ஒரு பத்திரிகை நிருபர் சென்ற திங்கட்கிழமை பேட்டிகண்டபோழுது நகரிலுள்ளவர்கள் அம்மைப்பால் குத்திக் கொள்ள வேண்டுமென்ற ஆலோசனை கூறினார். நகரசபை வைத்தியசாலைகளிலும் (டிஸ்பென்சரிகள்) நகரமண்டபத்திலும் இலவசமாக அம்மைப்பால் குத்தப்படுகிறது.

இதுவரை 10,000க்கு அதிகமானவர்கள் அம்மைப்பால் குத்தப்பட்டிருக்கின்றனர்.

கற்புநிலையும் நவநாகரீகமும்

1-ம் பக்கத்தொடர்ச்சி

"மைத்ராயிணும்மிகவும்வனப்புடைய ரெணி அவர்மேல் மடநல்லார்தம் சிந்தை நடத்திடும்"

என்றிருக்கிறபடியால் ஆணுய்ப் பிறந்தவர் பிதாவானாலும், சகோதரரானாலும், பெற்ற பிள்ளையானாலும் மற்றும் எவரானாலும் அவர் இருக்குமிடத்தில் அச்சமின்றியிருக்கலாகாது.

"பெண்ணுதவுங் காலே பிதா விரும்பும் வித்தையே
பெண்ணில் தனம்விருப்பு மீன்ற தாய்—கண்ணிடையில்
கூரிய சுற்றங் குலம் விரும்புங் காந்தனது
பேரழகு தான்விரும்பும் பெண்"

என்றபடி பெண்ணைக் கட்டிக் கொடுக்கும்பொழுது, பிதா வித்தியா சாதுரியமுள்ள பண்டிதனுக்குக் கொடுக்கவேண்டுமென்றும், தாயானவள் மகன் ஐச்சுவரியவானுக்கு வாழ்க்கைப்பட வேண்டுமென்றும் சுற்றத்தார் நல்ல குலத்தன் வந்து வாய்க்கவேண்டுமென்றும் அந்தப் பெண் அழகிற் சிறந்தவனை நாம் வரிக்கவேண்டுமென்றும் நினைப்பதுண்டு; ஆயினும் அது அப்படியே வாய்க்குமா? தெய்வச்செயலின்படி நல்லவோ சம்பவிக்கும். இவ் வண்ணம் விதியின் பயனாகக் கிடைக்கப்பட்ட புருஷன் அழகற்றவனாகவோ கிழவனாகவோ, வறியவனாகவோ இருந்தாலும் அவனை அவமதியாமல் புல்லென்றாலும் புருஷன், கல்லென்றாலும் கணவன் எனப் பேணிப் போற்றி நடக்கவேண்டும்.

"அன்னைதயையு மடியாள் பணியு மலர்ப்
பொன்னினழகும் புவிப்பொறையும்—வன்னமுலை
வேசி துயிலும் விறன்மந்திரிமதியும்
பேசிலிவையுடையாள் பெண்"

என்றபடி மனைவியானவள் கணவனுக்குத் தாதிப் பணிவிடை செய்பவளும், மந்திரிபோலச் சமயோசிதமறிந்து நல்லாலோசனை சொல்பவளும், ஸ்ரீமகாலட்சுமி போலப் பெண்ணைப் பெண் இச்சிக்கத்தக்க அதிரூப சௌந்தரியவதியும் பூமாதேவிபோலச் சலியாத பொறுமையுடையவளும் வேசை போலப் பர்த்தாவைச் சரசகேளி விநோதத்தாற் பிரியப்படுத்துகின்றவளுமாயிருப்பதன்றி, அன்புள்ள தாய் போல இனிய உணவுகளால் போஷிக்கின்றவளுமா யிருக்கவேண்டும். இதனுலல்லவோ தாய்க்குப்பின் தாரம் என்று உலகம் சொல்லுகின்றது.

கற்பின் மகிமையை விபரிக்க யாரால் முடியும்? தாமரையிலைநீரும் புளியம்பழமும் போல மணவாழ்க்கையில், ஒட்டியும் ஒட்டாத மகாத்மாவாகிய அத்திருவள்ளுவர் கூட தம் மனைவி இறந்தபோது அம் மாதர்க்கரசியின் நற்குண நற்செய்கைகளினாலல்லவோ சிலேஷ்டுமத்தில் அகப்பட்ட ஈயைப்போலப் பரிதபித்தார். வேதமோதுகின்றவர்களுக்கு ஒரு மழையும், செங்கோல் செலுத்துகின்றவர்களுக்கு ஒரு மழையும், கற்புடையவர்களுக்கு ஒரு மழையுமாக அல்லவோ மாதம் மும்மாரி பொழிகின்றது.

"வேத மோதிய வேதியர்க் கோர் மழை
நீதிமன்னர் நெறியினுக் கோர் மழை
மாதர் கற்புடை மங்கையர்க் கோர் மழை
மாத மூன்று மழையெனப் பெய்யுமே"

நெறிதப்பிய வேதியர்க்கொரு மழையும், கொடுங்கோல் மன்னர்க்கொரு மழையும், புருஷனைக் கொலை செய்யும் பெண்களுக்கொரு மழையுமாக அல்லவோ வருஷம் மூன்று மழை பெய்கின்றது.

"அரிசிவிற்றிடு மந்தணர்க்கோர்மழை
வரிசை தப்பிய மன்னருக் கோர் மழை
புருஷனைக்கொன்ற பூவையர்க்கோர் மழை
வருஷ மூன்று மழையெனப் பெய்யுமே"

முற்காலத்தில் கற்புடையவர்களில் சந்திரவதி காட்டுத்தீயைக் குளிரச் செய்தாள். தமயந்தி தன்னை இச்சித்த வனவேடனை எரித்தாள். அநசூயை தன் கற்பைச் சோதிக்க வந்த திரிமூர்த்திகளைக் குழந்தைகளாக்கி ஸ்தன்யபானம் பண்ணுவித்தாள். சாவித்திரி தன்நாயகன் உயிரை யமன்கொண்டு போகிறதருணத்தில் அவனுடனே வாதாடி மீட்டாள். நளாயினி ஆணிமாண்டவியர் சாபத்தால் தனக்கு வைதவ்யம் வாராது பொழுதுவிடியாதிருக்கப் பிரதிசாபமிட்டுத் தேவர்கள் வேண்ட விடிய அநுக்கிரகித்தாள். திருவள்ளுவரின் நாயகி தன்னை எரிக்கும்படி உறுக்கிப்பார்த்த தவசியை "கொக்கென்று நினைத்தாயோ கொங்கணவா" எனப் பரிகசித்தாள். இப்படியெல்லாம் இருப்பதனுலல்லவோ கற்புடையவர்களின் மகிமை தேவர்கள் முனிவர்களாலும் அளவிடற்கரிதென்று சொல்லப்படுகின்றது. கற்புடைய மங்கையர்களோ உலகத்தை இரட்சிக்கவல்ல சிறந்த வீரர்களையும் பெரியோர்களையும் பயக்கக் கூடியவர்கள். புத்த சமயத்தை ஸ்தாபித்து மக்களையெல்லாம் சன்மார்க்கத்திலநிற்கச்செய்து இரட்சித்தருளிய புத்தபெருமான மாயாதேவியெனும் உத்தம ஸ்திரீயின் வயிற்றிலே அவதரித்தார். கிறிஸ்துநாதரை மேரியென்னும் உத்தமியே உலகுக்கு ஈந்தருளினர். சுவாமி விவேகானந்தா மகாத்மா காந்தி முதலிய பெரியார்கள் தோன்றுவதற்குக் காரணராயிருந்தவர்கள் இவர்களின் உத்தமத் தாய்மார்களே. ஆகவே ஒரு கற்புடைய பெண் ஈரு உலோகத்தையும் தேவலோகமாக்க வல்லவளாகின்றுள். கலாசாலைகளும் கல்லூரிகளும் பாடசாலைகளும் சபைகளும் பத்திரிகைகளும் மற்றும் அறிவாளிகளும் நம் நாட்டில் சிறந்த பண்டை நாகரீகத்தை நிலைநாட்டிக் கீழ்நிலையடைந்து போகும் நம் சமூகத்தை மேல்நிலையில் வைப்பார்களாக.

சி. எம். சாமி
மன்மதக் குளிகை

மிகுந்த
பலத்தையும்
ரத்த
விருத்தியையும்
உண்டாக்கும்

அநேக பரிசுகள் பெற்று, உலகெங்கும் புகழப்பட்டது;
இதற்கு நிகரான ஔடதம் வேறில்லை
ஒரேகுளிகையில் பரீட்சிக்கலாம்.

இழந்த சக்தியும் பலமும் திரும்ப வரும், நல்ல ஜீரணம், ரத்த விருத்தி, சரீரக்கட்டு, தேகபுஷ்டி, வாலிபசக்தி, இவற்றைத்தரவல்லது, எவ்வித பலஹீனம் இடுப்புவலி, உஷ்ணரோகங்கள் நீங்கும். ஒரு முறை பரீட்சித்தவர்களுக்கு இதன் அருங்குணம் விளங்கும். கேட்லாக்கிற்கு எழுதுங்கள்.

அர்க்கியமாட்டோர் முன்பண மனுப்ப வேண்டும்

60 குளிகை ரூபா 5   20 குளிகை ரூபா 2

தலைமை ஆபீஸ்:-
மலையப்பசாமி வைத்தியசாலை பழனி S I

கிளை ஆபீஸ்:-
1 மலையப்பசாமி வைத்தியசாலை சிந்தாதிரிப்பேட்டை மதராஸ்
2 மலையப்பசாமி வைத்தியசாலை 195 செட்டியார்தெரு கொழும்பு
3 மலையப்பசாமி வைத்தியசாலை வண்ணார்பண்ணை கதிரேசன் கோவிலடி யாழ்ப்பாணம்

Y221 31-3-41 30-3-42

திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

மீ. 396

வெள்ளி மே 9

முதலாவது ஒலிபரப்பு

காலை 7-30 சிதாரம்பம் (இசைத்தட்டு) 7-45 தமிழில் செய்திகள் 7-55 தூரன் வாசகம் 8-05 துதிகள் (இசைத்தட்டு) 8-50 ஆங்கிலத்தில் செய்திகள் 9-00 ஒலிபரப்பு முடிவு.

இரண்டாவது ஒலிபரப்பு

1-00 படங்களிலிருந்து (இசைத்தட்டு) 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-35 டி. என். வெங்கடாசல ஐயங்கார் பாட்டு 2-00 தமிழில் செய்திகள் 2-05 கோடைக்கல்வி 2-30 ஒலிபரப்பு முடிவு.

மூன்றாவது ஒலிபரப்பு

மாலை 5-00 வாத்திய சங்கீதம் 5-15 திருக்கண்ணபுரம் எஸ் ஸ்ரீனிவாஸ பிள்ளை புல்லாங்குழல் 6-0 0 ஆங்கிலத்தில் செய்திகள் 6-05 டி. எ. நாகஸ்வாமி பாகவதர் (இசைப்பயிற்சி) 6-15 இசைப்பயிற்சி 6-30 கிராமாந்திர நிகழ்ச்சிகள் 7-00 தமிழ் இலக்கியம் பேச்சு 7-15 நாகஸ்வரம் (இசைத்தட்டு) 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-50 ராமராஜ்யாபிஷேகம் 8-30 காலவறிவிப்பு 9-00 உலக விவகாரங்கள் (இசைத்தட்டு) 9-15 குடைவேலை (இசைத்தட்டு) 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 10-00 ஒலிபரப்பு முடிவு.

சனி மே 10

முதல் ஒலிபரப்பு

காலை 7-30 சிதாரம்பம் 7-45 தமிழில் செய்திகள் 7-55 ராமாயண விளக்கம் 8-05 திருச்சி பஜனை கோஷ்டி பஜன் 8-25 ஸ்ரீமதி ஜி. சென்னம்மா பாட்டு 8-50 ஆங்கிலத்தில் செய்திகள் 9-00 ஒலிபரப்பு முடிவு.

இரண்டாவது ஒலிபரப்பு

1-00 "சண்டிதாஸ்" (இசைத்தட்டு) 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-35 ஸ்ரீமதி ஜி. சென்னம்மா பாட்டு 2-00 தமிழில் செய்திகள் 2-05 சுந்தாமூர்த்தி ஓதுவார் (இசைத்தட்டு) 2-15 எஸ். ஜி. கிட்டப்பா (இசைத்தட்டு), 2-30 ஒலிபரப்பு முடிவு.

மூன்றாவது ஒலிபரப்பு

மாலை 5-00 வாத்திய சங்கீதம் 5-15 தம்பகோணம் ராஜமாணிக்கம் பிள்ளை வயலின் 6-00 ஆங்கிலத்தில் செய்திகள் 6-05 பேலகவாடி வரதராஜ ஐயங்கார் பாட்டு 6-30 கிராமாந்திர நிகழ்ச்சிகள் 7 00 செய்தி சருள் 7-15 கோஷ்டி வாத்தியம் (இசைத்தட்டு) 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-50 தம்பகோணம் ராஜமாணிக்கம் பிள்ளை வயலின் 8-30 எங்கள் தபால் பெட்டி 8-40 பேலகவாடி வரதராஜ ஐயங்கார் பாட்டு 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 10-00 ஒலிபரப்பு முடிவு.

ஞாயிறு மே 11

முதல் ஒலிபரப்பு

காலை 7-30 சிதாரம்பம் (இசைத்தட்டு) 7-35 தமிழில் செய்திகள் 7-55 தேவாராதனை (ரோமன் கத்தோலிக்க) 8-25 பலவகை (இசைத்தட்டு) 8-50 ஆங்கிலத்தில் செய்திகள் 9-00 ஒலிமலர் 10-00 ஒலிபரப்பு முடிவு.

இரண்டாவது ஒலிபரப்பு

1-00 இன்னிசை (இசைத்தட்டு) 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-35 டி. அர். கிருஷ்ண மூர்த்தி பிள்ளை பாட்டு 2-00 தமிழில் செய்திகள் 2-05 வி. ஜி. நரஸிம்மம் பந்தலு விகடம் 2-30 ஒலிபரப்பு முடிவு.

மூன்றாவது ஒலிபரப்பு

மாலை 5-00 வாத்திய சங்கீதம் 5-15 ஸ்வாமிநாத பிள்ளை கிளாரினெட் 6-00 ஆங்கிலத்தில் செய்திகள் 6-05 திரையேசிவரிலிருந்து (இசைத்தட்டு) 6-15 இசைப்பயிற்சி 6-30 கிராமாந்திர நிகழ்ச்சிகள் 7-00 புத்தக விமர்சனம் 7-15 நடைமுதல் நிகழ்ச்சி 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7.50 ரேடியோக் கச்சேரி எஸ். வி. சுப்பையா பாகவதர் பாட்டு டி. துராஜப்பா வயலின் எஸ். ஜி. சுந்தரம் தபலா 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 10-00 ஒலிபரப்பு முடிவு.

திங்கள் மே 12

முதல் ஒலிபரப்பு

காலை 7-30 சிதாரம்பம் 7-45 தமிழில் செய்திகள் 7-55 திருச்சி குப்பண்ணு அய்யர் வீணை 8-30 ரஸிகர்களுக்கு (இசைத்தட்டு) 8-50 ஆங்கிலத்தில் செய்திகள் 9-00 ஒலிபரப்பு முடிவு.

இரண்டாவது ஒலிபரப்பு

1-00 டாக்கி பாட்டுகள் (இசைத்தட்டு) 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-35 எஸ். கே. சதாசிவம் பிள்ளை பாட்டு 2-00 தமிழில் செய்திகள் 2-05 கோடைக்கல்வி 2-30 ஒலிபரப்புமுடிவு

மூன்றாவது ஒலிபரப்பு

மாலை 5-00 வாத்திய சங்கீதம் 5-15 குமாரி கே. தமயந்தி பாட்டு 6-00 ஆங்கிலத்தில் செய்திகள் 6-05 திருச்சி குப்பண்ணு அய்யர் வீணை 6-30 கிராமாந்திர நிகழ்ச்சிகள் 7-00 இது திருச்சி 7-15 வாழ்க்கைப் பலகணி 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-50 ஸ்ரீமதி லக்ஷ்மி ரங்கநாயகம் பாட்டு 8-30 எஸ். கே. சதாசிவம் பிள்ளை பாட்டு 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 10-00 ஒலிபரப்பு முடிவு

தமிழ் இலக்கியம்

(முற்றொடர்)

இவ்வாறு ஈசனைப் பாடாது நாராயணனையே பாடிய ஆழ்வார்களும் ஸ்ரீ வர்களைப் பாடாது சிவனையே பாடிய நாயன்மார்களும், நாள்தோறும் தமிழை வளர்த்தார்கள். தேவாரம் பாடிய மூவருள் ஒருவராகிய திருஞான சம்பந்தரை 'நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞான சம்பந்தர்' என்றும் அன்றோர் போற்றினார்கள். தமிழ் நாட்டு மலையும் நதியும், மற்றைய இயற்கைப் பொருள்களும் அவர் தேவாரப்பாட்டிலே படமெடுத்துக் காட்டப்படுகின்றன. மந்தமாருதம் வந்துலாவும் திருக்குற்றாலத்தில் வாழும் மந்திகளை அவர் பாட்டிலே காணலாம். பாவார் சோலை மயிலாட, புரிந்து குயில்கள் இசைபாட, சாமர மாலை அருகசைய நடந்து செல்லும் காவேரியாற்றின் அழகினை அவர் பாட்டிலே காணலாம். இன்னும் கண்ணுக்கினிய நிறமும் காதுக்கினிய மொழியும் வாய்ந்த கிளிகளைக் காணலாம். சோலையிலே பறந்து திரியும் ஒரு பசுங் கிளியை நோக்கி அவர் பேசும் முறையினைக் காண்போம்.

சிறையாரும்மடக்கிளியே யிங்கேவா,
தேனொடு பால்
முறையாலேயுணத்தருவன்; மொய்ப்
பவளத்தொடு தரளம்
துறையாருங்கடற்றோணிபுரத்தீசன்
துளங்குமிளம்
பிறையாளன் திருநாமமெனக்கொரு
கால் பேசாயே.

என்ற தேவாரப்பாட்டில் தமிழ் மணமும் தெய்வ மணமும் ஒருங்கே கமழக் காணலாம். பறந்து வரும் பசுங்கிளியைப் பார்த்து, இளங்கிளியே இங்கே வா. பாலும் தேனும் கலந்து நான் உனக்குப் பருகத்தருவேன். நீ எனக்கு இனிய மொழியால் என் ஈசன் திருநாமத்தை ஒரு முறை பேசாயோ? என்று திருஞானசம்பந்தர் வேண்டுகின்றார்; இவ்வாறும் அவர் பாட்டில் அமைந்த இலக்கியச் சுவைகள் பலவாகும்.

இவ்வாறு சைவ வைணவப் பெரியார்கள் அருளிச் செய்த பாடல்களால், இயற்றமிழும் இசைத்தமிழும் ஏற்றமுற்றன. பண்ணின திறமுணர்ந்த பாணர்கள் இப்பாடல்களை இன்னிசைக் கருவிகளில் அமைத்துப் பாடினார்கள். பண்ணென்ற இசைபாடும் அடியார்கள் நாடெங்கும் மதிக்கப்பட்டார்கள். இவ்வண்ணம் தெய்வத் தமிழ்மணம் எங்கும் பரந்து கமழ்ந்த காலம் கி. பி. மூன்றாம் முதல் எழுநூறுவரை என்று பொதுவாகக் கூறலாம். சங்க காலத்தில் கற்றறிந்தோர்க்கு மட்டும் இன்பம் பயந்த தமிழ்மொழி இவ்விடைக்காலத்தில் கற்றார்க்கும் கல்லார்க்கும் களிப்பருளும் களிப்பாய் நிலவிற்று. பொதியமலையில் வாழும் அகத்தியரால் ஆதரிக்கப்பட்டு' சங்கப் புலவர்களால் வளர்க்கப்பட்ட தமிழ் மாது இப்பொழுது எல்லோருக்கும் இனியளாய் தமிழ் நாட்டில் இனிது உலாவினள். செல்வத்தால் வரும் இன்பத்திலும் உயர்வாகத் தமிழ்ப்பாட்டால்வரும் இன்பம் பெரிதாக மதிக்கப்பட்டது.

இவ்வாறு பெரியோர் பொருட்செல்வத்தால் வரும் சிறப்பைவிரும்பாது அருட் செல்வத்தை நாடி நின்றமையால் தமிழ் நாடெங்கும் பக்தி மயமாயிருந்தது. இறைவனைப் பாடாத நாளெல்லாம் பயனற்ற நாள் என்று பாவலர் கருதுவாராயினர். தேவாரப் பாடல்பெற்ற ஸ்தலங்களும், ஆழ்வார்களின் மங்களா சாசனம்பெற்ற திருப்பதிகளும் பெருஞ்சிறப்படைந்தன, புதிய கோயில்கள் பல எழுந்தன. கோயில் இல்லா ஊரில் குடியிருத்தல் ஆகாது என்னும் கொள்கை நிலைபெறுவதாயிற்று. மன்னரும் செல்வரும் கோவில் கட்டும் பணியை மேற்கொண்டார்கள். தஞ்சாவூரில் ராஜ ராஜ சோழன் பெரியதோர் கோவிலைக் கட்டி முடித்தான். அவன் மைந்தனாகிய கங்கை கொண்ட சோழன் தன் பெயரால் அமைத்த கங்கைகொண்ட சோழபுரத்தில் சிறந்ததோர் ஆலயம் செய்து முடித்தான்.

கோவில்கள் எங்கும் தோன்றிய பொழுது சிற்பக்கலை சிறந்து வளர்ந்தது. ஓவியக்கலை உயர்வடைந்தது. இசையும் நடனமும் ஏற்றமுற்றன. தமிழ்நாடு தெய்வ மணமும் கலை மணமும் ஒருங்கே கமழும் திருநாடாய்த் திகழ்ந்தது.

—வாஞ்ஞொலி

கைதிகளை இரும்பாணியாற் குத்திய கைதி

12 வருட காலம் சிறைவாசஞ் செய்த கைதி

விடுதலை பெறுந் தருணத்தில் விளைந்த சம்பவம்

கம்பஹா மே 2

மஹார சிறைச்சாலையைச் சேர்ந்த கோர்டியாலு பெரேரா என்னும் கைதிமீது அலாது சகாக் கைதியான கே. டி. எட்வின் அப்பு என்பவரை மார்பில் இரும்பாணியாற் குத்திப் படுகாயப்படுத்தியதாகவும், பண்டுலஹாமி என்னும் மற்றொரு கைதியையும் அதே இரும்பு ஆணியாற் காயப்படுத்தியதாகவும் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்டவழக்கில எதிரி கம்பஹா அடிஷனல் நீதிபதி திரு. பி. ஸ்ரீஸ்கந்தராசா முன்னிலையில் குற்றத்தை ஒப்புக் கொண்டும்போது, தாம் பன்னிரண்டு வருடகாலஞ் சிறைவாசஞ் செய்திருப்பதாயும் அங்கிருந்து விடுதலை பெற இன்னும் எட்டு மாதங்களிருக்கின்றன வென்றும் தாம் ஓயாது துன்புறுத்தப்பட்டமையால் இவ்விதஞ் செய்யவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டதென்றும் சிறை அதிகாரிகளிடமும் சமுகமளித்தவர்களிடமும் தெரிவித்த குறைகள் புறக்கணிக்கப்பட்டு விட்டன வென்றும் கூறினர்.

எதிரி சிறைச்சாலை அதிகாரிகளால் கோட்டிற்குக் கொண்டுவரப்பட்டிருந்தார். அவர் ஒரு சந்தர்ப்பத்திற் புத்திசுவாதீனமில்லாதவர்கள் போல நடந்து கொண்டதால், மூளைப் பரிசோதனை விடுதியில் விசாரணைக்கு மறியலில் வைக்கப்பட்டார். எதிரியின் மூளை நல்ல ஸ்திதியில் இருப்பதாயும் அவர் விசாரணை செய்வதற்குத் தகுதியாகஇருப்பதாயும் வைத்திய சாக்ஷியத்தில் சொல்லப்பட்டது.

வழக்கு விசாரணைக் கெடுக்கப்பட்டபோது எதிரி தாம் நிரபராதி என்று கூறினர்.

காயமுற்ற இரு கைதிகளும் சாக்ஷியங் கூறிய பின்னர், எட்வின் என்னுமொருவர் தம்மைத் துன்புறுத்தியதாகவும் தாம் அவரை ஓர் இரும்பு ஆணியால் குத்தியதாகவும் எதிரி கோர்ட்டாரிடம் தெரிவித்தார். முறைப்பாடு செய்து கொள்வதற்கு ஒருவரு மிலாததால் தாம் அவ்விதஞ் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டதென்றும் அவர் கூறினர். சிறை அதிகாரிகள் காரணமாகக் காயமடைந்த இருவரும் தம்மைத் தொந்தரவு செய்தனரென்றும் எதிரி தெரிவித்தார்.

மஹார சிறைச்சாலையில் சுப்பிரின்டெண்ட் சிறை | அதிகாரிகள் ஆகியோரின் விருப்பப்படிதான் சகல காரியங்களும் நடைபெறுவதென்றும் எதிரி கூறினர். ஒரு கைதி ஏதாவது முறைப்பாடு செய்தால், அது கவனிக்கப்படுவதில்லையென்றுஞ் சொன்னர்.

எதிரி அதன் பின்னர்த் தாம குற்றவாளிதான் என்று ஒப்புக்கொண்டார்.

நீதிபதி தீர்ப்புக் கூறுவதை மே மாதம் 8-ந் திகதிக்குத் தவணையிட்டார்.

எம்டன் துவம்ஸம் செய்யப்பட்டது

லண்டன், மே 1

பிரித்தானிய விமானப் படை எம்டன் தளத்தின்மீது பயங்கர சேதங்களை இழைக்கக் கூடிய புதுவெடிகுண்டுகளை வீசியதாக விமானப் படை மந்திரி காரியாலயச் செய்தி ஸ்தாபனம் கூறுகிறது. சமீபத்தில் எம்டன் நகரிலுள்ள தபாற் கந்தோருக்கு அருகில் வீழ்ந்த ஒரு வெடிகுண்டு அவ்வட்டார முழுவதையும் தவிடுபொடியாக்கிவிட்டது. 200 வீடுகள் சேதமடைந்தன. 70 வீடுகள் முற்றாக நாசமாயின.

திருநெல்வேலி ஒற்றுமை நிதி (வரை உளது)
அதிகாரம் பெற்ற மூலதனம் ரூபா 500,000.
ஒன்று 25 சதமாக 80 மாதங்கள் செலுத்தி ரூபா 25ம் ஆதாயமும் பெறலாம்
வங்கித்தொழிலும் வியாபாரமும்
இலாபகரமாய் நடக்கின்றன.
தேசியகருமங்களை வளர்ப்பதால் சுயேச்சைபெறமுடியும்.
இலகுவான முறையில் இறுக்கக்கூடிய கடன்கள் கொடுக்கிறோம்.
உயர்ந்த வட்டி விகிதங்களோடு தவணைக்கும்
நிரந்தரமாயும், சம்பாத்தியத்திலும், நடைக்கணக்கிலும்
பணம் ஏற்றுக்கொள்வோம்.
பங்குகளுக்கு முந்துங்கள்!
வ. சோமசுந்தரம்,
(வி) காரியாதிகாரி.
(Y. 89. C 1-11-39 to 31-10-40)

குயீன்பிரண்ட் (அரசி அடையாள) ஓடுகள்
குறைந்த விலை — நிறைந்த குணம்
எங்கும் பெயர்பெற்ற, உறுதிவாய்ந்த
ஊறாத, நல்ல சத்தமுள்ள
யாவரும் விரும்பும் அழகிய ஓடுகள்.
இ. சுந்தரமூர்த்தி, (Sole Agent)
பெரியகடை, யாழ்ப்பாணம்.
c/o S. Veeragathipillai & Sons.
(Y. 89. B 12-8-39—11-8-40.)

சலவைசெய்தமல்லுகள்
மிகச்சிறந்த தரமுடையது
50" அகலமுள்ளது யார் ஒன்று 32 சதம் அல்லது 20 யார்கொண்ட துண்டு ஒன்று ரூ. 5-75
51" அகலமுள்ளது யார் ஒன்று 35 சதம் அல்லது 20 யார்கொண்ட துண்டு ஒன்று ரூ. 6/-
51" அகலமுள்ளது யார் ஒன்று 50 சதம் அல்லது 20 யார் கொண்ட துண்டு ஒன்று ரூ. 9/-
சில்லறை டிப்போ
பெரியகடை, யாழ்ப்பாணம்.
வெள்ளவத்தை ஸ்பின்னிங் அன்ட் வீவிங் மில்ஸ்.
சொந்தக்காரர்கள்; தி புறவிடென்ற் இன்வெஸ்மென்ற் கம்பெனி லிமிற்றெட்.
(இந்தியாவில் ஸ்தாபிதமானது)
Mis 127-19-12-40 அங்கத்தவரின்பொறுப்பு வரையறுக்கப்பட்டது.

இருமல், இளைப்பு
சுகமானவர்
மதிப்புரை

மரைக்காயர் டிரேப்பரி ஸ்டோர்
112, 2-ம் குறுக்குத்தெரு,
கொழும்பு.
"ஆஸ்துமா" என்னும் இருமல், இளைப்பு, சுவாச காசரோகத்தால் நான் இரண்டு வருஷ காலம் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தேன். தண்டபாணி வைத்திய சாலையில் சென்ற 1938 செப்டம்பர் மாதத்தில் நாளக பஸ்பமும் சித்திர மூலச் சூரணமும் ரூபா 12 சதம் 50 க்கு வாங்கி 25 நாள் சாப்பிட்டேன். ரோகத்தின் கஷ்டங்கள் நீங்கிச் சுகமடைந்தேன் பின்பு இதுவரை 2 வருடங்களாகியும் எனக்கு நோய் திரும்ப வரவில்லை. திடகாத்திரமாக இருக்கிறேன். என்னைப் பார்த்துவிட்டுச் சுமார் 100 பேர்கள்வரை தங்களிடம் மருந்து சாப்பிட்டுச் சுகமடைந்திருக்கிறார்கள். தங்களுக்கு என்றும் மறவாத நன்றி செலுத்துகிறேன். 19.10.40
(ஒப்பம்) E. A. M. S. மரைக்காயர்.
ஸ்ரீ M. S. மரைக்காயர்.
இருமல், இளைப்பு, காசம், க்ஷயம், பீனிசம், தமேன் நோய்களுக்கு
25 நாள் தாதுக பஸ்பம்
,, நாள் மூலச் சூரணம் } ரூ. 7-50
நோய் விபரம் எழுதவும்   கேட்லாக் இனம்.
தண்டபாணி வைத்தியசாலை,
96 செட்டியார்தெரு, கொழும்பு
Mis 204 5-3-41 4-6-41

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ்சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by S. ADCHALINGAM residing at Vannarponnai East, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripaalana Sabai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Thursday 8th May, 1941.